# ஆத்மஜோதி



தருமபுர ஆதீனம் 25-வது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்ரமணிய தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள்

விரோதிகிருது ௵ மார்கழி - தை ௴




ஓர் ஆத்மீக மாத வெளியீடு


எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே. - சுத்தானந்தர்


ஜோதி-24 விரோதிகிருது ஞு - மார்கழி-தைமீ 1ம்உ [15-1-72] -சுடர்-2-3


# பொருளடக்கம்


கயிலைக் குருமணிக்குக் கருத்து நிறைந்த வாழ்த்து —33
உபதேச மொழிகள்! —34
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் —35
ஈடு செயய முடியாத பேரிழப்பு ஆகும்! —39
காசியில் பரிபூரணம் —40
குருமணி மலர்த்தாள் போற்றி! —45
ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி —46
அருளுலகத் தருமைக் குருமணி —51
நான் கண்ட குருமணி —54
சைவம் வளர்த்த சற்குருமணி! —58
தாயிற் சிறந்த தலைவன்! —59
இயற்கையே சோதிடம் —66
உரையொழியப் பற்றுர் பெற்றுர் —72
கயிலைக் குருமணியும் தருமை ஆதீனமணியம் —76
உணர்வு —79


## ஆத்மஜோதி சந்தா விபரம்


ஆயுள்சந்தா 100-00
வருட சந்தா 5-00
தனிப்பிரதி சதம் 50



ளரவ ஆசிரியர் திரு. க. இராமச்சந்திரா
பதிப்பாசிரியர் திரு. நா. முத்தையா

ஆத்மஜோதி நிலையம்,
நாவலப்பிட்டி போன்: 353

# கயிலைக் குருமணிக்குக்
# கருத்து நிறைந்த வாழ்த்து!

(T. M. குமரகுருபரன்பிள்ளை)

கரும்பும் செந்நெலும் கலித்தெழு கழனியும்
சுரும்பினம் மொய்க்கும் தூய்மலர்ப் பொய்கையும்
தகையொடு பொலியும் தருமையம் பதியில்
வகை வகையான வளர்பொருள் தம்முடன்
தவப்பெருஞ் செல்வம் தழீஇய தலைவ!
சிவப்பெரு ஞானம் தேக்கிய முனிவ!
குமரனைப் பாடிய குருபரர் பதியில்
குமரகுருபரர் குலவிய பெயரால்
நாடொறும் மகேஸ்வர பூஜைசெய் நிதியும்
ஆடவர் பள்ளியும் அரிவையர் பள்ளியும்
மூவர்தே வார முதன்மைப் பரிசும்
தேவனர் காசி யாத்திரைப் பரிசும்
பதிப்பகம் ஒன்றும் படிப்பகம் ஒன்றும்
கதிதரு பன்னிரு திருமுறை நிதியும்
மூவர் பாடலும் முத்தமிழ் நூல்களும்
தேவர் குறளும் தெளியஅச் சேற்றியும்
அல்லார் கண்டத் தம்மான் தனக்கு
நல்லலட் சார்ச்சனை நாளு நடாத்தியும்
அலகில் கோவிலில் அருள்செறி விழாவும்
புலவர் பேச்சும் பொலிவுற நடாத்தியும்
ஏர்மிகுகின்ற கேதார நாதன்
சீர்மிகு திருவடி சிந்தையிற் கொண்டு
எந்தை யெம்மான் எனநின் றிறைஞ்சியும்
சிந்தை ஒன்றிச் சிவனடி சேர்த்தியும்
ஞானச் செங்கோல் நாடொறும் செலுத்தும்
ஞான சம்பந்த நற்றவக்குரிசில்!
அன்புக் கொள்கலம் அருள்நிறை வைப்பே!
நன்மைக் குறைவிடம் ஞானமா நிதியே
மென்மலர்த் திருவடி மெய்யால் வணங்குதும்
தென்ன டுடைய சிவனே போற்றி
போற்றி போற்றிநும் பொன்னடி போற்றியே!

# உபதேச மொழிகள்!

ஆலநிழலிலிருந்தும் ஆலமரத்தைத் தேடி அலேவாரைப் போல நின்னடிக் கீழிருந்தும் நின்னேத் தேடி அலேந்தோம்: காட்டுவாரில்லாமையால்.

★ ★

என் கையில் ஞானவாள் இருக்கின்றது. கனவிலும் அஞ்சேன். என்னே யார் என்ன செய்ய முடியும்?

★ ★

இறைவா! நாங்கள் எதை நினேத்தாலும் எதைச் சொன்னாலும் எதைச் செய்தாலும் அவை உன் செயலே. அதனேயும் நின் அருளாலேயே உணர்ந்தோம். அதன்பயன் என்றும் எம் செயல் இல்லே என்பதனே அறிந்ததேயாம்.

★ ★

உயிருக்குயிராக உண்ணின்றுணர்த்தினும் மக்கள் அறியமாட்டார் என்று எண்ணி, அகத்தும் புறத்துமாக இருந்து உணர்த்துவோம் என்று, கடவுள் குருவடிவம்தாங்கி வந்து உண்மையை உணர்த்துகின்றார். ஆதலால் கடவுளே குரு; குருவே கடவுள்.

—குருஞானசம்பந்தர்

★ ★

சுதந்திரம் என்பது பொறுப்புணர்ச்சி. பொறுப்புள்ள மனிதன் கடமையில் தவறான். உழைப்பு அவனுக்கு ஒரு விருந்து. மக்களின் உழைப்பெல்லாம் சுதந்திர நாட்டின் செல்வம். உழைப்பு உருவாகத் தளராத மனம் தேவை. தளராத மனம் தெய்வ நம்பிக்கை ஒன்றால்தான் உண்டாகும். கடவுளே நம்புங்கள். கடமையைச் செய்யுங்கள். தனக்கென வாழாப் பிறர்க்கு ஊழியராகுங்கள். என்றும் இன்பமாக வாழலாம்.

—கயிலேக்குருமணி

★ ★

## தருமையாதீனம் 25-ஆவது குரு மகா சந்நிதானம்
# ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.

(ஆசிரியர்)

கயிலைக் குருமணி அவர்கள் காசியில் இறைவன் திருவடி அடைந்தார்கள் என்ற செய்தி கேட்டுச் சைவ உலகம் துக்கத்தில் ஆழ்ந்தது. குருமணி அவர்களின் மறைவு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். ''காசியில் இறக்க முத்தி'' என்பதற்கேற்ப காசியில் பரிபூரணம் எய்தியமை குருமணி அவர்களுடைய தன்னலங்கருதாத் தொண்டினை விளக்கு கின்றது. காசியில் இறப்பவர்களுக்கு சிவபிரான் தாரக மந்திரத்தை உபதேசம் செய்கின்றார் என்பது ஐதீகம்.

தரும ராசன் பூசித்துப் பேறு பெற்றமையின் தருமபுரம் என்னும் பெயர் எய்தியது. பிரமதேவரும் பூசித்துப் பேறு பெற்றார். திருஞான சம்பந்தப் பெருமானுடைய தேவாரங் களுக்கு யாழ் வாசித்து முத்திப்பேறு பெற்ற திருநீலகண்ட யாழ்ப்பாணரது அன்னையார் பிறந்த இடம் திருத்தரும புரமாகும். இத்தகைய தரும புரத்தில் இருந்து கயிலைக் குருமணி அவர்கள் சிவ சேவை செய்யக் கிடைத்தமை தருமபுரத்திற்கே பெருஞ் சிறப்புத் தருவதொன்றாகும்.

தருமை ஆதீனஸ்தாபகர் தருமைக் குருஞானசம்பந்த சுவாமிகள் அருளிய பாடல் ஒன்று பின் வருமாறு:

ஆசையறுய் பாசம் விடாய் ஆனசிவ பூசை பண்ணுய்
நேசமுடன் ஐந்தெழுத்தை நீ நினையாய் — சீ சீ
சினமே தவிராய் திருமுறைகள் ஓதாய்
மனமே உனக்கென்ன வாய்.

"திருமுறைகள் ஓதாய் மனமே உனக்கென்னவாய்'' என்ற பகுதி கயிலைக் குருமணி அவர்களின் மனதிற்பதிந்து மனதை உருக்கி விட்டது. அதற்காகவே தமது வாழ்வை அர்ப்பணம் செய்தார் என்ருல் அது மிகைப் படுத்திச் சொல்வதாகாது. தேவாரத் திருமுறைகள் ஏழும் மற்றைய திருமுறைகளும் தல வரலாறு தகுந்த குறிப்புகள் பொழிப் புரைகளுடன் வெளி வந்து யாவரும் பெற்றுப் பயனடை யுமாறு மலிவுப் பதிப்பில் விளங்குகின்றமை செயற்கரிய பெருஞ்சிவ தொண்டாகும்.

திருமுறைகளுக்கு திருமுறை கண்ட சோழன், நம்பி ஆண்டார் நம்பி, சுந்தரமூர்த்தி சுவாமிகள், சேக்கிழார் பெருமான் ஆகியோர் செய்த செயற்கரும் சேவையோடு வைத்து எண்ணப்படத்தக்கவர்கள் கயிலைக் குருமணி ஆவார் கள். அதற்கு மேலாக ஏட்டுப் பிரதிகளை அச்சிட்டுக் கொண்டு வந்து தமிழிற்கும் சைவத்திற்கும் தொண்டுசெய்த நாவலர் பெருமான், ராவ் பகதூர் சி. வை. தாமோதரம் பிள்ளை, டாக்டர். உ. வே. சாமிநாதையர் போன்ருரின் தொண்டுகளுக்குச் சமதையாகவும் வைத்து எண்ணப்படத் தக்கவர்கள்.

திருமுறை வழிபாடு, திருமுறைப் பாராயணம், திரு முறைச் சிந்தனை முதலியவற்றில் பெரிதும் ஈடுபாடுடைய வர்கள். கயிலைத் திருப்பதிகங்களை—சிறப்பாகச் சுந்தரரது ''தானெனை முன்படைத்தான்'' என்னும் திருப்பதிகத்தை ஓதக் கேட்பதில் பெரு விருப்புடையவர்கள்.

''சிவபெருமானுக்குரிய சிறப்பு அடையாளங்களுள் ஒன்று முக்கண் உடைமை. மூன்று திருக்கண்களுள் வலக் கண் ஞானக்கண். இடக்கண், அம்மையாருடைய அருட் கண், நெற்றிக் கண் உலகை நொடித்து உய்வித்தருளும் கண். முக்கண்ணர் ஆகிய சிவபெருமான் திருவாய் மலர்ந் தருளிய வேதங்கள் நான்கு. அவை ஆன்மாக்கள் உய்தற் பொருட்டே அருளப்பெற்றன. நான்குவேதங்களின்சாரமே, தேனினும் இனிய தண்டமிழ் பாடிய மூவர் தேவாரம். திருமுறைக் களஞ்சியங்களைப் போற்றி வாழ்பவையும் வாழ்

விப்பவையும் தென்னாட்டுச் சைவ மடங்கள் ஆகும். திருமுறைகளைக் கண்ணெனப் போற்றி மக்களுக்கு அருள்ஞானத்தை வழங்குவது, திருக்கைலாய பரம்பரைத் தருமபுர வாதீனம் என்பது கண்கூடு.''

என்று திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தருமபுரவாதீனத்தையும் சிவபதம் அடைந்த கயிலைக் குருமணி அவர்களையும் பாராட்டியுள்ளார்கள்.

திருக்கயிலையாத்திரை செய்து, கயிலையை நேரில் தரிசனம் பெற்று, காசியில் பூதவுடலை விடும்பேறு மானிடப் பிறவியில் கிடைத்தற்கரிய ஒன்றாகும். இப்பேறுகயிலைக் குரு மணி அவர்களுக்கே வாய்த்துள்ளது என்றால் அது மிகையாகாது. பன்னிரண்டாம் திருமுறைக்கு மூலகாரணர் திருக்கைலாயத்திலிருந்து பூ வுலகத்திற்கு வந்த ஆலால சுந்தரர். அதே போல பன்னிரு திருமுறைகளையும் அச்சு வாகனம் ஏற்றி மக்கள் எல்லோரும் படித்து பயனடைய உதவியவர் கயிலையைத் தரிசித்த கயிலைக் குருமணி ஆவார்கள்.

உலகில் அன்னதானம், சொர்ன தானம், வித்தியா தானம், பூதானம், சிரமதானம் எனப் பல தானங்கள் இருப்பினும் எல்லாத் தானங்களிலும் தலை சிறந்த தானம் ஞான தானமாகும். ஏனெனில் ஞானமே திருவடி, திருவடியே ஞானம். மனிதப் பிறப்பின் பூரண நோக்கம் இத் திருவடி ஞானத்திலே தான் நிறை வேறுகிறது. இத்தகைய திருவடிஞானத்தை எல்லா ஆன்மாக்களும் பெற்றுய்ய வேண்டும் என்ற கருணையினாலேயே கயிலைக் குருமணி அவர்கள் திருமுறைகளை தகுந்த முறையில் பரிசீலனை செய்வித்து வெளியீடு செய்தார்கள்.

திருமுறைத் தமிழைத் திருநெறிய தமிழ் என்று பா ராட்டுவர். திரு என்பது ''திருவே என் செல்வமே

என்ற தேவாரத்தில் சிவபெருமானைக் குறிக்கிறது. திருவொளி காணிய பேதுறுகின்ற திசைமுகன்'' என்பதில் திருவருளைக் குறிக்கின்றது. ''சிவமே பெறுந்திரு எய்திற்றிலேன்'' என்பதில் பேரின்பத்தைக் குறிக்கின்றது.

செப்பரிய அயனொடுமால் சிந்தித்தும் தெரிவரிய அப்பெரியதிரு, 'சென்றடையாத திரு' ஆகும். ஆகவே திருநெறி என்பது சிவ நெறி, அருள் நெறி, பேரின்ப நெறி என்ற பொருள் பயப்பதாகும். இத்தகைய திரு நெறியை உலகுக்கு விளங்கச் செய்யும் பெருமை திருமுறைகளுக்குரியதாகும். பன்னிரு திருமுறை ஆசிரியர்களும் அவ்வழி நின்று உலகுக்கு வாழ்ந்து காட்டினார்கள். கயிலைக் குருமணி அவர்களும் அவர்கள் வழி வாழ்ந்து அவர்கள் அன்று செய்த அரும்பணியை இன்று தாமும் செய்து நற்பேறு பெற்றார்கள். அவர்கள் வழிநின்று நாமும் திருமுறைகளைப் போற்றுதலே நம் கடனாகும்.

---

★★

# நோய் தீர்க்கும் மருந்து ஸ்ரீ பஞ்சாட்சரம்.

இந்தப் பஞ்சாட்சரம் தான் பிறவிக் கடலுக்குத் தெப்பமாவது, 'அஞ்செழுத்தின் புணை பிடித்துக் கிடக்கின்றேனை' ''நானேயோ தவம்செய்தேன் சிவாய நம எனப்பெற்றேன்'' என்றெல்லாம் மணிவாசகர் சொல்கிறார். 'நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லுநா நமச்சிவாயவே'' என்றார் சுந்தரர். எல்லாம் அரன் நாமமே சூழ்க என்ற திருப்பாசுரப் பகுதிக்கு, எல்லாம் அரன் பெயர் சூழ்க என்றது தொல்லுயிர் யாவையும் வாழி அஞ்செழுத்தோதி வளர்கவே'' என்று உரைவகுக்கின்றார் சேக்கிழார் பெருமான். உடலுக்குள் போகாமலே வாயிலே வைக்குமளவில் மருந்தாகித் [illegible]ய பிறவி நோய் தீர்க்கும் மருந்து தான் ஸ்ரீ பஞ்சாக்கரம் [illegible]ன்று சொல்கிறார் நக்கீர தேவர்.

—கயிலைக் குருமணி.

# கயிலைக் குருமணியின் மறைவு ஈடு செய்ய முடியாத பேரிழப்பு ஆகும்!

(ஸ்ரீமத். சரவணமுத்து சுவாமிகள்)

தென் இந்தியாவின் தலைசிறந்த தருமபுர ஆதீனத்தின் ஒப்பற்ற தலைவராக, 25-ஆவது குருமகா சந்நிதானமாக விளங்கினார்கள் கயிலைக்குருமணி அவர்கள். அவர்கள் அருள் அரசோச்சிய காலத்தில் அவர்கள் செய்த சிவப்பணியில் திளைத்திருந்த நாம் அவரது மறைவு இவ்வளவு கெதியில் நிகழும் என்று கனவுகூடக் காணவில்லை. அவர்களுடைய அருளரசாட்சியில் இருக்கும் இருபத்தேழு தேவஸ்தானங்களும், அங்குள்ள மூர்த்திகளுமே அதிர்ச்சி அடைந்திருப்பார்கள் என்றால் அதுமிகைப்படுத்திக் கூறுவதல்ல. காலத்திற்கேற்ற முறையில் சமயப்பிரசங்கங்களும் புத்தக வெளியீடுகளும் புனருத்தாரண கும்பாபிஷேகங்களும் நடத்திச் சைவ மக்களின் உள்ளங்களைக் கவர்ந்தார்கள். கயிலைக்குருமணி அவர்களின் அருளரசாட்சியின்கீழ் இருக்கும் வைத்தீஸ்வரன் கோயிலின் சிறப்பை மெச்சாதார் இல்லை என்றே கூறலாம். அக்கோயிலின் கும்பாபிஷேகத்தையும் குருமணி அவர்களின் சிவ சேவையையும் நேரில் பார்க்கும் பாக்கியம் அடியேனுக்குக் கிடைத்தமை என்றும் மறக்க முடியா ஒன்றாகும். அப்பர் பெருமான் முயன்றும் காணமுடியாத கயிலைக் காட்சியைக் குருமணி பெற்றார்கள் என்றால் அவரின் மகத்துவத்தை எம்மால் கூறமுடியுமோ? குருமணி அவர்களின் மறைவு சைவ சமயத்திற்கே பேரிழப்பு என்பதை ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டமும் உணர்ந்து ஆத்ம சாந்திக்காகத் தனது பிரார்த்தனையைச் செய்கின்றது. இந்தப் பேரிழப்பை 26—வது சந்நிதானமாக வருகின்றவர்கள் ஈடு செய்வார்கள் என்று நினைந்து ஆறுதல் பெறுகின்றோம்.

★★

# காசியில் பரிபூரணம்

தருமையாதீனம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

''ஈசனே, இல்லென வேண்டா இறையவர் தம்முதல் - அல்லும் பகலும் அருளுகின்றானே'' என்றும்,

'என் புந்திவட்டத்திடைப் புக்கு நின்றானையும் பொய்யென்பேனோ' என்றும்,

'உன்னும் உளது; ஐயம் இலது; உணர்வாய் ஓவாது -
மன்னுபவம் தீர்க்கும் மருந்து' என்றும் அனுபூதிமான்கள் இறைவன் உண்மையை இனிதெடுத்து அறிவுறுத்தினார்கள். ''அவனன்றி ஓர் அணுவும் அசையாது'' என்றும் வலியுறுத்தினார்கள்.

ஆயினும், அவர்கள் வாக்குகளிலெல்லாம் நமக்கு எளிதில் நம்பிக்கை உண்டாவதில்லை. இறைவன் உண்டு என்பதை நம்பாதவர்கள் நம்பாமலே இருக்க, நம்புபவர்க்கு இறைவன் தனது அருள் நலத்தை வழங்குதல் இன்றும் கண்கூடாக நிகழ்வதே யாகும்.

''புத்தரும் சமணரும் புறனுரைக்கப்
பக்தர்கட் கருள்செய்து பயின்றவனே''

என்ற திருஞான சம்பந்தர் திருவாக்கு இங்கு நினைக்கத்தக்கது.

நமது ஆதீனத்து 25வது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் தங்கள் அருளாட்சிக் காலத்தில் இறைவனது திருவருட் செயலை உள்ளங்கை நெல்லிக்கனி போலப் பலமுறை கண்டு, தங்கள் அடியார்களுக்கும் வெளிப்படுத்தியுள்ளார்கள். சிறப்பாக அவர்கள் மேற்கொண்ட அரிய கயிலை யாத்திரையில் குறிப்பிடத்தக்க பல

அரிய செயல்கள் நிகழ்ந்தமையை உடன் சென்ற அடியார் கள் நேரிற் கண்டும், ஏனையோர் அவ்வடியார்கள் சொல்லக் கேட்டும் அனுபவித்துள்ளார்கள். இத்தகைய அனுபவங் கட்கு ஏற்ப ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணியவர்கள் பரிபூரண மான செய்தியும் திருவருட் செயலாக அமைந்து, அன்பர் பலரையும் அற்புதத்திலும், ஆனந்தத்திலும் ஆழ்த்தினமை பலரும் அறிந்து மகிழ வேண்டிய ஒன்று.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமகாசந்நிதானம் அவர்கள் இவ்வா தீனத்திற்குச் சொந்தமான வேளூர்த் தலத்தில் எழுந்தருளி யுள்ள ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசாமியிடம், அளவிலாப் பே ரன்பு கொண்டவர்கள். கார்த்திகை தோறும் அப்பெரு மானுக்குச் சிறந்த திருமுழுக்கு செய்வித்து மகிழ்பவர்கள். தங்கள் அருளாட்சியில் அப்பெருமானுக்கு வள்ளி தெய்வ யானையோடு நவரத்தின அங்கி சாத்திக் களிப்புற்றூர்கள். ஆண்டுதோறும் ஐப்பசித் திங்களில் வரும் மகாசஷ்டி தினங்களில் திருச்செந்தூருக்கு எழுந்தருளி நோன்பு இயற் றிச் செந்தில் ஆண்டவனுக்குப் பல சிறப்புகளுடன் வழி பாடு இயற்றுவித்து உளம்கனிந்து நிற்கின்ற வழக்கத்தின் படி இவ்வாண்டு மகாசஷ்டிக்கும், அவர்கள் எழுந்தருளி ஞர்கள். கயிலாய தரிசனம் செய்து, கயிலை மலையானையே பெரிதும் நினைவிற் கொண்டு நின்ற அவர்கட்கு, கயிலை மலை அனைய செந்திலில் இருக்கும் பொழுதே, கயிலைப் பெரு மானது திருவருள் 'காசிக்குச் செல்ல வேண்டும்' என்னும் திருவருள் அழைப்பாகிய திருக்குறிப்பைத் தோற்றுவித் தது. இது திருவஞ்சைக் களத்திலிருந்த சுந்தரருக்குக் கயி லைப் பெருமான் வெள்ளை யானையை அனுப்பியருளியதை நினைவுபடுத்துகின்றது.

கயிலைக்குருமாமணி அவர்கள் செந்திலிலிருந்து ஆதீ னத்திற்கு எழுந்தருளிய உடனே அடியார் பலருடன் பயண மாகி 10-11-1971 காலை 8 மணி அளவில் காசியை அடைந்து ஸ்ரீ குமாரசாமி மடத்தில் எழுந்தருளியிருந்தார்கள். அப் பொழுது நொடி நேரமும் வாளா இராமல், ஓதுவார்களை கொண்டு திருமுறைப் பாராயணம் செய்வித்ததுடன், [illegible]

மை யாதீனம் 10வது மகாசந்நிதானம் ஸ்ரீ சிவஞானதேசிகர் அருளிச் செய்த காசி அருட்பாக்களில் சிறப்பாகத் தாரகப் பத்தினை ஓதச் செய்து பொருள் விரித்து, அதிலே பெரிதும் ஈடுபட்டிருந்தார்கள். மாலை ஐந்து மணியளவில் சிறிது உடல் நலம் குன்றியது போலக் காணப்பட்டார்கள். உடன் சென்றிருந்த சிதம்பரம் டாக்டர் திரு. கே. அரங்கசாமிப் பிள்ளை அவர்களும், காசி நகரத்தில் உள்ள உயர் மருத்துவர்களும் வேண்டும் சிகிச்சைகளைத் தங்கள் ஆர்வத்தால் செய்தார்கள்.

திருவருள் அழைப்பு வந்தது போலும்! ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் காசியை அடைந்த 12 மணி நேரத்திற்குள் படுக்கையில் படுக்காமலே வீற்றிருந்தபடியே கடைசியில் அடியார்கள் அனைவரையும் தங்கள் திருக்கண்ணால் ஒரு முறை நன்றாக உற்று நோக்கி 'முத்தையா, முத்தையா' என்று செல்வமுத்துக்குமரன் பெயரை அழைத்துக் கொண்டே பரிபூரணமாகிவிட்டார்கள். அவர்களது ஆன்மா அவர்களது திருக்கண் வழியாகவே இறைவன் திருவடி நிழலை அடைந்ததெனல் வேண்டும்.

திருவாரூர், சிதம்பரம், காசி என்னும் மூன்று முத்தித் தலங்களுக்குள் காசி இறக்க முக்தி தரும் தலம் என்பதும், அங்கு இறப்பவர்களை அம்மை விசாலாட்சி தன் மடியில் கிடத்தி முன்தானையால் மெல்ல வீச, அப்பன் விசுவநாதப் பெருமான் அவர்கள் வலக்காதில் தாரக மந்திரத்தை உபதேசிப்பான். என்பதும் புராணப் பிரசித்தம். ஆயினும் அதனைப் பெறவேண்டிக் காசிக்குச் சென்று பல பலநாள் அங்கு வாசம் செய்தவர்களுக்கும் சில சமயம் அப்பேறு கிடைக்காமல் போனதை நாம் அறிந்திருக்கின்றோம். ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணியவர்கள் நான்கு நாட்களுக்குள் காசியை அடைந்து, அடைந்த 12 மணி நேரத்திற்குள் பரிபூரணம் ஆனார்கள் என்றால், அதை 'திருவருட் செயல்' என்று சொல்லாமல், வேறு என்ன சொல்வது! காசியில் சென்று பரிபூரணமாக வேண்டும் என்று திருவுளங்கொண்டு அதற்

கென்றே பயணமாகிச் சென்று அடைந்ததைப் போலல்ல வா இருக்கின்றது கயிலைக்குருமாமணி அவர்களது அற்புதச் செயல்!

'மின்னும்உத்த ரீகத்தை வீசும்விசா லாட்சிபங்கன்
தன்னிகராம் காசியில்வாழ் சற்குருமுன் சென்றெனக்கு
உன்னுமொரு தாரகத்தை ஓதும்நாள் என்றென்றிங்கு
அன்னமே கேட்டுவந்தென் அகமகிழ விளம்பாயே'

'பவமெனும் சாகரத் தாக்கையெனும் ஓட்டையாம்
படகின்மேல் ஏறிநிற்பேன்;
பரையருட் காற்றின்றி யேபிணிச் சுழலினும்
பட்டுத் திசை தப்பியே
கவலைகள் வராமலே கௌரி உன் கரகம்ப
காருண்ய உத்தரீயக்
காற்றிறைவர் தாரகச் சத்தமோ டெறிந்தருட்
காசியூர் ஆனந்தமாம்
சிவமெனும் கரைதுறையில் ஏறஅருள் எண்ணிலாச்
செகதண்ட மீந்துவைத்துட்
சிறைக்கரம் அணைக்குமயி லேநான் எனும் சிறிய
செந்துக்கும் அஞ்சலென்பாய் . . .
அவனவளொ டதுவெனும் சீவகோ டிகளின்மர
ணந்தத்தி லஞ்சலென்பாய்
அண்டகோ டிகள்பணி அகண்டபூ ரணியென்னும்
அன்னபூ ரணி அன்னையே'

என்னும் 10வது மகாசந்நிதானத்தின் அருட்பாக்களில் ஈடு பட்டிருந்த கயிலைக்குருமணி அவர்கட்கு அவற்றின் பயன் அப்படியே வாய்த்த சிறப்பை என்னென்பது! அவர்கள் பரிபூரணமானது காசிக்குச் சிறந்த காளாஷ்டமி திதியாய் அமைந்ததும் வியப்பே. அவர்கள் திருமேனி தருமைக்குக் கொண்டுவரப்பட்டு, சமாதியில் எழுந்தருளிவிக்கப்பெற் நாள் 10வது மகாசந்நிதானத்தின் குருபூசை நாள அமைந்தது அதனினும் வியப்பே. இவற்றுளெல்லாம்

வருட் செயல் இனிது விளங்கித் தோன்றுதல் அறியப்படு கின்றதன்றே.

தருமையாதீனத்தில் முன்பிருந்த மகாசந்நிதானங்களில் காசிக்குச் சென்று தங்கியிருந்து மீண்டவர்கள் 10ஆவது மகாசந்நிதானமேயாகும். அடுத்து நம் கயிலைக் குருமாமணி அவர்களே பலமுறை காசிக்குச் சென்று மீண்டு முடிவில் காசியில் பரிபூரணமானுர்கள் என்பது ஊன்றி உணரத்தக்க ஒன்று. தங்கள் அருளாட்சிக் காலத்தில் கயிலாய தரிசனம் செய்து மீண்டது முதலிய அரிய திருவருட் பணிகளில் ஆழ்ந்திருந்து, திருவருள் அழைக்கச் சென்று காசியில் பரிபூரணமான ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்களது அருள் நிலையைப் போற்றுதலாக இலங்கை வாழ் பேரன்பர்கள் நினைவு மலர் ஒன்று வெளியிட இருப்பது நமக்குப் பெருமகிழ்வைத் தருகின்றது.

நினைவு மலர் பலவகையாலும் சிறப்புற மலர்ந்து அருள் மணம் வீசவும், கட்டுரையாளர்கள், வெளியீட்டாளர்கள் முதலிய அன்பர்கள் பலரும் குருவருளும், திருவருளும் பெற்று நன்கினிது வாழவும் செந்தமிழ்ச் சொக்கன் திருவடிகளைச் சிந்திக்கின்றோம்.

**வாழ்க திருவருள் நெறி**
**வளர்க திருவருள் பணி.**

### சிவபெருமான்.

சீர்கொண்ட ஆனந்தமாகி எங்கும்
 செறிவாகிப் பரமாகித் திறம தாகி
ஏர்கொண்ட கருணைத்திரு வுருவமாகி
 எழில்கொண்ட மலைமகளைஇடத்திற்கொண்டோன்
கார்கொண்ட நிறங்கொண்ட முகுந்த ஞகிக்
 கடவுளர்வந் தடிபரவும் கடவுள் கொன்றைத்
தார்கொண்ட முடியனவன் அடியைத்தாழ்ந்து
 தாழாத பெருங்கதியில் வாழா நிற்பாம்.

# குருமணி மலர்த்தாள் போற்றி!

(பேராசிரியர் சி. இ. சதாசிவம்பிள்ளை)

நீலமார் களனுமின்றி நெற்றியின் விழியு மின்றி
ஏலவார் குழலியின்றி எம்மையாட் கொள்ள வுன்னி
சேலுலாம் தருமைமேவித் தேசிக வடிவம் காட்டும்
கோலமார் கைலைகண்ட குருமணி மலர்த்தாள் போற்றி.

சிவநெறி யோடும் நல்ல செந்தமிழ் நெறியு நன்கு
அவனியிற் சிறக்க வேண்டி ஆலவா யரன் கோலோச்சப்
புவனியில் அமர்ந்த தொப்பப் போற்றிடு தருமை சார்ந்து
தவநெறிச் செங்கோ லோச்சும் சற்குரு மணியே போற்றி.

திருமுறைப் பாடசாலை சித்தாந்த வகுப்புச் சாலை
தருமவைத் தியஞ்செய் சாலை தகவுறும் அன்னசாலை
மருவு கோச் சாலையின்ன வைத்திவை புரந்து மண்ணில்
அருள்நெறிச் சைவம் காத்த அண்ணல் நின் அடிகள் போற்றி.

தங்குரு முதல்வர் ஞான சம்பந்தர் பேரில் ஒவ்வோர்
திங்களும் மலர ஞான சம்பந்தைச் சீரே டாக்கி
அங்கதில் எமக்கு வேண்டும் அருளுப தேசம் ஈந்து
பொங்கிய சைவ வாழ்வு புகட்டிய புனித போற்றி.

குமரியே முதலாய்க் கைலைக் குலமலை யீறதாக
அமையுமித்தலங்களெல்லாம்அருள்கொடுசென்றுசேவித்(து)
உமை முலைப் பாலுண் காழி வேந்தரொத் துலகில்வாழ்ந்து
தமை முன மளித்த கைலை சார்ந்த சற் குரவ போற்றி.

பரிசன ரோடு கைலைப் பருப்பதம் அடைந்து போற்றிக்
குருபரம் பரையை நாட்டிக் கொண்டிடு பரிவா லன்பர்
தருகன காபிடேகம் தாரணி தழைக்கப் பெற்ற
குருமணி தருமை யாண்ட கோமணி போற்றி போற்றி.

★ ★

- ஸ்ரீ ல ஸ்ரீ -

# கயிலைக் குருமணி

**- அருள் தியாகராசா -**

(தமிழ் நிகழ்ச்சி அதிகாரி,
இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்.)

யான் சென்ற நவம்பர் மாதம் 13-ந் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நிற்க வேண்டிய ஓர் அவசியம் ஏற்பட்டது. எப்பொழுதும் எமது நிலையத்திலிருந்து ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகளைக் கேட்கும் பழக்கமுடைய யான் அன்று காலை திருச்சி வானொலி நிகழ்ச்சிகளைக் கேட்பதற்காக வானொலிப்பெட்டியின் அருகில் உட்கார்ந்து கொண்டிருந்தேன். காலை 6-35 அளவில் திருச்சி வானொலி அறிவிப்பாளரின் சோகக்குரல் ஒன்று ஒலித்தது. ''தருமபுர ஆதீனத்தின் 25-வது குருமகாசன்னிதானம், ஸ்ரீலஸ்ரீ கைலைசுப்பிரமணிய தேசிகஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் காசியில் இம் மாதம் 10-ந் திகதி இயற்கை எய்திவிட்டார்கள். அதனையொட்டி இன்று மாலை 6-30க்கு ஓர் விசேட நிகழ்ச்சியை ஒலி பரப்புகின்றோம்.'' இந்தச் செய்தியை என்னால் நம்பவே முடியவில்லை. ''எனது தந்தைக்கு ஒப்பானவராய்த், தாயைப் போல் பரிவுடையவராய், கைலைக்குருமணியாய், நண்பனாய், நல்லாசிரியனாய், சிவநெறிபரப்பும் பேரொளியாய், செந்தமிழணங்கிற்கோர் நந்தா மணிவிளக்காய்த் திகழ்ந்த மகா சன்னிதானம் மறைந்துவிட்டாரே'' என்று நினைந்தபடியே கவலைக் கடலில் மூழ்கியிருந்தேன்.

அப்பொழுது என் மனைவி என்னிடம் வந்து யான் கவலையுடன் இருப்பதற்குரிய காரணத்தைக் கேட்டார். என்னைத்

தேற்ற வந்த என் இல்லாள் காரணத்தைக் கேட்டறிந்த வுடன், அயற்சியெய்திப் பின் ஒருவாறு தேறிக், ''கைலைக் குருமணியைப் போல் மாதவம் செய்தவர்கள் இவ்வுலகில் ஒரு சிலர்தான் இருப்பார்கள். அவர்களுக்குத்தான் காசி யம்பதியில் சமாதியடையும் பெரும்பேறு கிட்டும். அவரின் ஆத்மா சாந்தியடையுமாறு பிரார்த்திப்போம், நாம் வேறு என்ன செய்ய முடியும்'' என்று கூறி என்னை ஒரு வாறு தேற் றினர்,

கயிலைக்குருமணியின் அருளாட்சிக்காலம் தருமபுர ஆதீனத்தின் பொற்கால மென்றே கூறலாம். அவர் தரும புர ஆதீனத்தின் ஆட்சியிலுள்ள 27 (இருபத்தேழு) சிவ ஸ்தலங்களைச் சிறந்த முறையில் பரிபாலித்து வந்தார். காசி, திரிவேணிசங்கமம், அரித்துவாரம், அமரநாத், பசு பதிநாத், திருக்கேதாரம் முதலிய வடநாட்டுச் செல்வப் பதிகளை யெல்லாம் பலமுறை தரிசித்த பெரும்பேற்றை யுடையவர். தமிழ் நாட்டிலும், கேரளநாட்டிலும், ஆந்தி ரப் பிரதேசத்திலுமுள்ள சைவப் பதிகளை யெல்லாம் பல முறை சென்று தரிசித்தவர். எல்லாவற்றிற்கும் மேலாக கைலைமலையானைக் கண்ணிணுற் கண்டு கும்பிட்டுப் பரவச மடைந்தவர். திருக்கயிலைமலையானைத் தனது பரிவாரங் களுடனேயே சென்று தரிசித்தார். திருநாவுக்கரசு சுவாமி களுக்குக் கயிலைத்தரிசனத்தைச் சிவபெருமான் திருவை யாற்றில் காட்டினர். ஆனல் கயிலைக்குருமணிக்கோ கயி லைத் தரிசனம் நேராகவே கிடைத்தது. கயிலைக்குருமணி யின் அணுக்கத் தொண்டரும் என் இனிய நண்பருமாகிய திரு. ஏ. கலியாணசுந்தர தேசிகர் அவர்கள் எழுதிய 'திருக் கயிலாய யாத்திரை' என்ற நூலில் கயிலைக்குருமணியவர் கள் கயிலாய யாத்திரையின் போது பலவிதமான சோதனை களுக்குட்பட்டதை விரிவாக எழுதியிருக்கின்றுர். கைலைக் குருமணியவர்கள் ஈழநாட்டிலுள்ள கதிர்காமத்தையும், ஏனைய சிவஸ்தலங்களாகிய திருக்கேதீஸ்வரத்தையும், திருச் கோணேஸ்வரத்தையும் தரிசிக்க வேண்டுமென்ற பேரா லுடன் இருந்தார். திருக்கேதீஸ்வரத் திருப்பணிச்சன

யின் முன்னாள் தலைவர் சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்கள் கைலைக்குருமணியை ஈழநாட்டிற்குத் தக்கமுறையில் அழைத்து உபசரிக்க வேணுமென்ற பெருவிருப்புடன் இருந்தார். அதற்கிடையில் இருவரும் மறைந்துவிட்டார்கள். விதியின் வலிதான் என்னே!

கயிலைக்குருமணியவர்கள், சைவத்திருமுறைகள் பன்னிரண்டையும், சித்தாந்த சாத்திரங்களையும், சிவாகமங்களையும் உள்ளன்புடன் போற்றி வழிபடும் இயல்பினையுடையவர். திருமுறைப் பாடல்களைக் குறிப்புரையுடன் வித்துவான் திரு. முத்து, சு. மாணிக்கவாசக முதலியாரவர்களைக் கொண்டு எழுதுவித்துச் சைவ உலகிற்கு உபகரித்திருக்கின்றார்கள். திரு. முத்து, சு. மாணிக்கவாசக முதலியாரவர்கள் இரண்டாம் திருமுறைப் பதிப்பில் எழுதிய முன்னுரையின் ஒரு பகுதி வருமாறு:-

''இவ்வெளியீடு தருமபுர ஆதீனம் இருபத்தைந்தாவதுகுருமகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிக **ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் திருவுள்ளத்தில் எழும் கருணை வடிவங்களுள் ஒன்றாகும். ஏனைய திருமுறைகளும், சித்தாந்த சாத்திரங்களும் முறையே நன்முறையில் வெளியிடுந் திருக்குறிப்பு அவர்களுக்கு உண்டு.** ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமான் திருவருள் துணையால் எல்லாம் இனிது நிறைவுறும்!''

இப்பொழுது திரு. முத்து, சு. மாணிக்கவாசகமுதலியாரவர்கள், காஞ்சிபுரம் மெய்கண்டார் ஆதீனத்தின் தலைவராய், தவத்திரு ஞானப்பிரகாச தேசிகபரமாசாரிய சுவாமிகள் என்ற தீட்சாநாமத்துடன் தொண்டு புரிந்து வருகிறார்கள்.

சுவாமி சிவானந்தர், காஞ்சி காமகோடி பெரியவாள் ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள், திருவாவடுதுறைஆதீனத்தின் குருமகா சன்னிதானம், மதுரை திருஞானசம்பந்தர் ஆதீ

ளூர்கள். முன்னாள் உபராஷ்டிரபதியும், இப்பொழுது பாரத நாட்டின் ராஷ்டிரபதியுமாய்க் கடமையாற்றுபவருமான மாண்புமிகு திரு. வி. வி. கிரியவர்கள் தருமபுர ஆதீனத்தின் விருந்தினராய்ச் சென்றிருக்கின்றார்கள்.

சென்னையிலுள்ள தருமபுர ஆதீனத்தின் சமயப் பிரசார மடமொன்றைப் பாரத நாட்டின் முதல் ராஷ்டிரபதி, டாக்டர் இராசேந்திர பிரசாத் உத்தியோக பூர்வமாகத் திறந்து வைத்தார்கள். பல மந்திரிகளும், நீதிபதிகளும் பிறநாட்டுப் பிரமுகர்களும், தருமபுர ஆதீனத்தின் ஆட்சியிலுள்ள திருக்கோயில்கள் மிகவும் தூய்மையாக வைத்திருப்பதைப் பாராட்டியிருக்கிறார்கள். கயிலைக் குருமணியின் நிர்வாகத் திறமைக்கு இவைகள் சான்று பகருகின்றன.

திருவள்ளுவரின் குருபூசைத்தினத்தை நாவலர் பெருமான் கூறியபடியே இவர்கள் மாசி உத்தரத்தில் கொண்டாடுவது வழக்கம். திருக்குறளுக்கு, ஓர் சிறந்த உரை வளம் ஒன்றை எழுதுவித்து வெளியிட்டார்கள். ஈழநாடு ஈன்ற துறவியும், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவருமாகிய ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமாரசாமித் தம்பிரானென்ற இலக்கணச் சுவாமியிடம் கயிலைக் குருமணியவர்கள் பெருமதிப்பும், பேரன்பும் வைத்திருந்தார்கள். அவரைக் கொண்டு 'முத்தி நிச்சயம்' என்ற நூலுக்கு உரையெழுதுவித்து வெளியிட்டுள்ளார்கள்.

ஸ்ரீலஸ்ரீ நாவலர் பெருமானிடத்தில் கயிலைக்குருமணியவர்களும், பேரன்பும் பக்தியும், பெருமதிப்பும் பூண்டவர்கள். அவர் தமிழிற்கும், சைவத்திற்கும் ஆற்றிய தொண்டுகளைப் போற்றுவதில் பெருமகிழ்ச்சியுடையவர்கள். ஒரு முறை என் வாழ்க்கைத் துணைவியுடன் யான் தருமையில் கைலைக்குருமணியைத் தரிசித்தபோது எங்களை அவர் நோக்கி, 'நீங்கள் நாவலர் பெருமான் அவதரித்த நாட்டி

பிறக்கும் பாக்கியமுடையவர்கள். உங்கள் இருவருக்கும் தமிழ் நன்ருய் வருமே' என்று ஆசியுரை கூறி வாழ்த்திஞர் கள்.

1947ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் யான் தருமையா தீனத்திற்கு முதன் முதலாகச் சென்று இக்குருமகாசன்னிதா னத்தைத் தரிசித்தபோது விபுலானந்த அடிகளைப்பற்றி என்னுடன் உசாவிஞர்கள். அதே ஆண்டில் ஐந்து மாதங் களுக்கு முன்னர் இவ்வுலக வாழ்வை நீத்த அடிகளாரின் பிரிவு தமிழுலகிற்கும், சைவ உலகிற்கும் ஓர் பேரிழப்பா கும் என்று பிரிவுரை பகர்ந்தார்கள். கந்தசட்டி காலங் களில் அவர் எப்போதும் திருச்செந்தூருக்குச் சென்று சண் முகப் பெருமானைத் தரிசித்து உபவாசம் இருக்கும் நியமம் பூண்டவர். கைலைக்குருமணியவர்கள் பேசப் பெரிதும் இனி யவர். தருமையாதீனம் வாழ்க!

**கைலைக்குருமணியின் முன்னோர்கள் வாழி! அவர் மரபில் வந்தோரும் வருவோரும் வாழி!**

---

தருமையாதீனக் குருமுதல்வர்

**ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**

சீரணியும் நுதலின்விழி மழுமான் நாகம்
திருந்தும்எரி பொருந்துவிடம் தெரிந்திடாமல்
தாரணி அன்பரையாள அவர்போல் வந்த
சைவசிகா மணிஎவர்க்கும் தலைவன் எங்கோன்
காரணியும் நெடியபொழிற் கமலை வேந்தன்
கருணைமலை பொழியும்இரு கடைக்க ணுளன்
பார்புகழும் ஞான சம்பந்தன் எந்தை
பரமன்இரு சரணமலர் பரவி வாழ்வாம்.

(சம்பந்த சரணலயர்)

# அருளுலகத் தருமைக் குருமணி

**(வைத்தியர் சி. கணபதிப்பிள்ளை என வழங்கும் ஈசான சிவன், புங்குடுதீவு.)**

தென் தமிழ் நாட்டு ஆதீனங்களில் வரலாற்றுச் சிறப்பு, வள்ளன்மைச் சிறப்பு, தொண்டாற்றும் சிறப்பு முதலியவற்றால் முன்னணியில் நிற்கும் ஆதீனங்களில் தருமபுரமும் ஒன்றாகும். திருக்கைலாய பரம்பரையின் திவ்விய சின்னமான தருமையாதீனத்தில் இருபத்தைந்தாவது குருமகா சந்நிதானமாக எழுந்தருளி இருந்து அருளாட்சி புரிந்து சைவத்தையும் தமிழையும் பேணிக்காத்து வளர்த்த பெருமையுடையவர்கள் கைலைக்குருமணி என சைவ அன்பர்களால் மதிக்கப்பெறும் மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கைலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்.

கைலைக்குருமணி அவர்களின் அருளாட்சியில் தருமையாதீனத்திற்குச் சொந்தமான இருபத்தேழு தேவஸ்தானங்களும் குடமுழுக்குப் பெற்றுள்ளன. பரிசுத்தமாகவும் ஒழுங்காகவும் நடைபெறும் அத்தேவஸ்தானங்களில் சிலவற்றை நாம் நேரில் கண்டபோது பரவசமடைந்தோம். ஆண்டவனை அணுகுவதற்குகந்த அமைதியான சூழலை அத்தேவஸ்தானங்களில் காணலாம். அவைகளில் நித்திய நைமித்திய காமிய பூஜைகள் காலந்தவறாது சிவாகம முறைப்படி நிகழ்வதை சைவ அன்பர்கள் அறிவர். சைவ சமயத்தின் இரு கண்களான தோத்திரங்களையும் சாத்திரங்களையும் குருமணி அவர்கள் உரியமுறையில் பரவச் செய்ததோடு அவற்றினைப் பதிப்பித்து மலிவு விலைக்கு வழங்கியுள்ளார்கள்.

வருடந்தோறும் திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு நடத்தி இலக்கிய இலக்கணங்களோடு சாத்திரத்தில் வல்

புலவர்களையும் அழைத்து பட்டி மண்டபம், கருத்தரங்கு, கவியரங்கு, உரையரங்கு முதலியவற்றில் பங்குபெறச்செய்து அறிவுப் பெருக்கும் அருட்பெருக்கும் ஊறிச்சுரந்து பரவ வழி வகைகள் செய்த பெருமையும் குருமணி அவர்களுக்கு உண்டு.

முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் தானே எல்லாப் பொருள்கட்கும் முதற்கருவாய் உள்ளதை உலகுக்குக்காட்டு வான் வேண்டி ஆடிய திருவிளையாடல் நிகழ்ச்சிகள் சில ஆவணிமூலத்தினத்தில்நடைபெற்றுள்ளனஆவணிமூலத்தின் சிறப்பு சைவ உலகவரலாற்றில் முக்கிய இடத்தைப் பெறு வது. இந்த ஆவணி மூல நட்சத்திரதினத்தில் ஒவ்வொரு ஆண்டும் விழா ஏற்பாடு செய்து சைவத் தமிழ்ப் பெரு மக்களுக்குப் பொன்னுடை போர்த்தியும் பட்டஞ் சூட்டியும் பதக்கமளித்தும் கௌரவிப்பார்கள்.

கைலைக் குருமணி அவர்கள் தமிழகத்தின் அமைச்சர்களை யும் நீதிபதிகளையும் பல்வேறு துறைகளைச் சார்ந்த அறிஞர் களையும் தருமைக்கு அழைத்துச் சிவவழிபாட்டில் பங்கு கொள்ள வைத்தவர்கள். அவர்களுடைய அருளாட்சியில் கட்டுண்டு களிப்படைந்த அன்பர்கள் அநேகர்.

சொக்கநாதப் பெருமான் உயிர்ப்பிணி அகற்றுவதோடு உடற்பிணி போக்கும் வைத்திய நாதனுமாவான். ''தீவி னைக்கோர் மருந்தாவான்'' ''மந்திரமும் தந்திரமும் மருந்து மாகித் தீராநோய் தீர்த்தருள வல்லான்'' என்பவை நமது அருளாளரின் மணிவாக்கு. இம்மணிவாக்கிற்கிணங்க உயிர்ப் பிணியையும் உடற்பிணியையும் தீர்க்கும் பரம்பொருளின் அருளினாலே தருமையாதீன மருத்துவ விடுதிகள் இயங்கிவரு கின்றன. குறிப்பாக வைத்தீஸ்வரன் கோவில் என வழங்கும் புள்ளிருக்கு வேளூரில் இலவச சித்தவைத்திய நிலையம் மிக வும் சிறப்பாக நடைபெற்றுவருகிறது. ரோகங்களை அகற் றும் சித்தமருந்துகள் பலவற்றையும் ஔஷதிகளில் சிறந்த மகாமூலிகைகளையும் நேரில் பார்த்துப் பரவசமுற்றிருக்கி றோம்.

நமது கைலைக் குருமணி அவர்கள்,

''நிகரறு நற்சிவதரும சிவஞானத்தை நிறுத்திட வல்லோனிலும்
உயர்ந்தோன் நிலத்தில் இல்லை
பகர் பரமசிவ யோகி அவனேயாகும்''

என்னும் திருவாக்கிற்கு இலக்கியமாக வாழ்ந்த மகத்துக் களில் ஒருவர். நமது ஈழநாட்டு அன்பர்கள் தருமையாதீனத்திற்குச் சென்றால் குருமணி அவர்களின் அருளாசியைப் பெற்றுத் திரும்புவதில் பெருமகிழ்வு கொள்வர். திருமடங்களின் ஆதீனகர்த்தர்களில் கைலையாத்திரை சென்ற குருமணி அவர்கள்—அவ்யாத்திரையின் போது காசி ஷேத்திரத்தில் சென்று காசி விசுவலிங்கப் பெருமானுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் செய்து ஏழைகளுக்கு அன்னவஸ்திரங்கள் ஈவதைக் கடைப்பிடித்துச் செய்ததன் பயனாக இப்பூவுலகில் நிலைபெற்றுள்ளதாகிய தருமையாதீனத்தில் சிவசொரூப வடிவாய் அருளாட்சி செய்தது போன்று ஐவகைக் கைலாயங்களில் ஒன்றாகிய சாதாக்கிய தத்துவதானக் கைலையிலும் சிவசாரூப்பிய முத்தி பெற்று காசி விசுவலிங்கப்பெருமானுக்கு,

''இணங்கு நறிய கருப்பூரத் தீபமினிதி னெடுத்தோர்கள்
பணங்கொளரவ கங்கணத்தோன் படிவமாகி வீற்றிருப்பார்''

எனக் காசி காண்டத்தில் கூறியபடி சிவகணநாத வடிவமாய் சிவானந்தப்பேறு பெற்றார்கள்.

குருமணி அவர்களின் வீடுபேறு இங்குள்ள சமயிகளுக்குப் பேரிழப்பாய் அமையினும் அவர்கள் சாதித்துக் காட்டிய சாதனைகளின் வழியொழுகி வருவோமாயின் அவர்களுடைய திருவருளாசிஎமக்குக்கிடைக்குமென்பதில்சிறிதும்ஐயமில்லை.

இது சத்தியம் சத்தியம்! முக்காலும் சத்தியம்!

திருச்சிற்றம்பலம்!

# நான் கண்ட குருமணி

## (பிரதிஷ்டாபூஷணம் சிவஸ்ரீ. ஐ. கைலாசநாதக் குருக்கள் அவர்கள்)

''நாயேனையுமிங் கொருபொரு ளாக நயந்து வந்து
நீயே நினைவின்றி யாண்டு கொண்டாய் நின்னை உள்ள வண்ணம்
பேயேன் அறியும் அறிவுதந் தாயென்ன பேறு பெற்றேன்
தாயே மலைமகளே செங்கண் மால்திரு தங்கச்சியே.''

2-5-1959 எனது வாழ்க்கையில் மறக்க முடியாத ஒரு நன்னாள். நயினாதீவில், நாகபூஷணி அம்பாளுக்கு விசேட குருவாகக் கடமையாற்றும் வேளை. ஒரு கடிதமும் பத்திரிகையும் வந்தது, உடைத்துப் பார்த்தேன்.

''புள்ளிருக்கு வேளூர், அஷ்டபந்தன, சுவர்ண பந்தன மகாகும்பாபிஷேகம் நிகழ இருக்கின்றது. அதையொட்டி ஒரு மலர் வெளி வருகின்றது. அதற்கு தாங்கள் விஷய தானம் செய்ய வேண்டும்.'' என்ற அன்புக்கட்டளை தாங்கிய கடிதம் அது. காலி, மெர்க்கண்டைல் வங்கி, திரு. எஸ். வைத்தியநாதன் அவர்கள் மூலம் எனக்குக் கிடைத்தது. அதனை இறைவியின் அருளாணையாகவே கொண்டு ஏதோ எனக்குத் தெரிந்ததை எழுதி அனுப்பினேன். இலங்கையினின்று கட்டுரை எழுதிய பெரியோர்களின் வரிசையில் எனது எழுத்தும் இடம் பெற்றது. அத்துடன் அடியேனுக்கும் தருமை வருமாறு ஆணை பிறந்தது.

அவ்வாணையினை சிரமேற்றாங்கி, நானும் எனது மருகரும், மற்றும் சைவத் திருவாளர்கள் ஸ்வாமி சரவணமுத்து, நயினாதீவு நாகபூஷணி வித்தியாசாலைத் தலைமை ஆசிரியர், சிவ பூஜாதுரந்தரர், திரு. சி. கணபதிப் பிள்ளை அவர்கள் பாரியார் முதலிய அனைவரும் இந்தியா நோக்கிச்

சென்ருேம். சென்ற ஒவ்வொருவரும் அவரவர்கள் வசதிக் கேற்பத் தங்கினுர்கள்.

நானும், மருகரும் நேரே தருமபுரம் சென்று அங்குள்ள திரு. வைத்தியநாதனின் இல்லத்தில் தங்கி ஸ்ரீலஸ்ரீ மஹா சந்நிதானம் அவர்கள் திருமுன் சென்று தரிசனம் செய் தோம். என்ன உபசாரம்! என்ன உபசாரம்!! உடனே தங்கள் சமயப் பிரசார வாகனம் மூலமாக நேரே வைத் தீஸ்வரன் கோயிலுக்குப் போகுமாறு உத்தரவு பிறந்தது. அப்படியே கோயில் சென்ருேம்.

அங்கும் எனக்கு அதிசயம் காத்திருந்தது. தென்னிந் திய அர்ச்சகர் சங்க மகா நாட்டில் என்னுடன் கலந்து கொண்ட ஆகம வித்துவான் சிவ ஸ்ரீ. சுவாமிநாத சிவாச் சாரியார். தேவகோட்டை சிவ ஸ்ரீ ஐயாமணிக் குருக்கள் சென்னை, ஸ்ரீ சாம்பமூர்த்தி சிவாச்சாரியார்.... இப்படி இன்னும் பல பெரியோர்கள். அவர்கள் அனைவரையும் ஒரு மிக்கக் கண்டதும் நான் அடைந்த ஆனந்தத்திற்கு அளவே இல்லை. ''நல்லாரிணக்கமும், நின் பூசை நேசமும்.'' என்பது போல சத் சங்கத்தின் உறவே மிக மிக இனிமையானது.

1-7-69 காலை யாகம் நடைபெறும் பொழுது யாக சாலையினுள் இருந்தேன். அப்பொழுது ஓதுவா மூர்த்திகள்'' ''ஆரார் வந்தார். அமரர் குழாத்தில்'' என்ற ஒன்பதாம் திருமுறைப் பாடலைப் பாடிய பொழுது, தருமைக் குரு மகா சந்நிதானம் அவர்கள், எங்கள் தெய்வ சிகாமணி தவத்திரு திரு. குன்றக்குடி அடிகளாரைப் பார்த்து யார் யார் வந்திருக்கின்ருர்கள் என்று வினவிய வார்த்தை இன் னும் எனது காதில் ஒலிக்கின்றது. அன்று தான் அவருக்குப் பொன்னுடை போர்த்திக் கவுரவித்தார்கள்.

யாகம் முடிந்ததும் வரிசைகளுடன் திருமடத்திற் எழுந்தருளியான பிறகு குருமகா சந்நிதானம் அவர்க நேரே தரிசிக்க வேண்டுமென்ற அவாவுடன் சென்றே

தரிசனம் தந்தார்கள். பின்பு ஒரு சோமன் ஜோடி கொடுத்து எங்கள் வேஷ்டியையே நீங்கள் இனிக் கட்டிக் கொண்டு நின்று, யாக தரிசனம் செய்து, இயன்ற அளவு கடமைகளும் செய்யலாம் எனத்திருவாய் மலர்ந்தார்கள். மதுரை சிவதர்ம பாஸ்கர ம. க. சுந்தரேஸ்வரப் பட்டர் அவர்களுடன் தங்கவும் வசதிகள் செய்தார்கள்.

யாக ஒழுங்குகள்:— சிவ யாகம் (பஞ்சாசன ரூபம்) அம்பாள் யாகம் (ஸ்ரீ சக்ரரூபம்) செல்வமுத்துக்குமாரசாமி யாகம் (அறுகோண வேதி) இவற்றைச் சுற்றி, வேதபாராயணம், சிவசங்கல்பம், ஸ்தோத்திரம், முதலியன. அதையடுத்து சிவ பஜனை. அதையடுத்து தேவார பாராயணம், அதையடுத்துதிருமுறைப்பாராயணம்,அதையடுத்துஅகண்ட நாம பஜனை. இன்னும், மேளக் கச்சேரி, சங்கீதக் கச்சேரி சமயச் சொற்பொழிவு முதலியன. இவற்றைக் காணவும் கேட்கவும் ''என்ன புண்ணியம் செய்தேன்'' என்று என்னை நானே வாழ்த்திக் கொண்டேன்.

இரவு, பகல் எந்நேரமும் அரஹர ஒலி: 2-7-69 புதன் கிழமை லக்ஷக் கணக்கான மக்கள் ஆவலோடு எதிர்பார்த்திருந்த பொன்னுள். கும்பாபிஷேகத் திருநாள். கும்பாபிஷேக மகா வைபவத்தை அகமும், புறமும் களிக்கக் கண்டு மகிழ்ந்தோம். விநாடி நேரமும் பிசகாது திட்டமிட்டுக் காரியங்களைக் கொண்டு செல்லும் குருமணி அவர்களுடைய சதுரப்பாடு எங்களை பிரமிக்க வைத்தது. பிறப்பின் பயன் அடைந்தோம்.

அடுத்த நாள் தருமபுரம் சென்று அஸ்டாதசபுஜ மகாலக்ஷ்மி, வன துர்க்கை, குரு ஞானசம்பந்தர் ஆலயம் முதலியவைகளைக் கண்டு தரிசித்தோம். அன்று வியாழக் கிழமை மௌனத் திருக்கோலத்துடன் தவக் கனலாகத் திகழ்ந்த ...நமணியின் தோற்றப் பொலிவை என்னுல் வர்ணிக்கமுடி...ல்லை. தனது அருமை சீடனும் கண்ணன் என்பவரை ...ழைத்து பன்னிரு திருமுறைகள், வேஷ்டிகள், பதக்கங்

கள் முதலியவற்றை அளித்து, வேளூர் மகா கும்பாபிஷேகம் சௌம்மிய ஆண்டு ஆனி மாதம் 18௳... அன்று எழுதப் பெற்ற ஆடை இரண்டு எடுப்பித்து அடியேனின் உடம்பில் போர்த்தி ஆசிகூறி, மற்ற ஆடையை, ஈழத்திற்குச் சென் றதும் எனது அன்பன் வயித்தியநாதனிடம் கொடுக்க வேண் டும் என்று கூறி அருளினுர்கள்.

கர்ணனுக்குப் பின்னுல் கொடையில்லே என்பார்கள். அக்கூற்றைப் பொய்ப்பிக்கும் கலியுகக் கர்ணனே நாங்கள் நேரில் கண்டோம். கந்த சஷ்டி உற்சவத்திற்கு ஒவ்வொரு முறையும் திருச்செந்தூர்செல்வதாகக் கேள்விப்பட்டு ஐப்பசி முதலில்வந்தஅஸ்தநக்ஷத்திரத்தன்றுநயினேயிலும்நல்லூரிலு ம்அர்ச்சனே செய்து பிரசாதம் அனுப்பி கிடைத்ததற்கு மறு மொழியும் கிடைத்தது. அடுத்ததாகஐப்பசி28-ல்வரும்அஸ்த நக்ஷத்திரத்தை முன்னிட்டுக் காசிக்குச்சென்ற குருமணியவர் கள் அங்கேயே பரிபூரணம் அடைந்துவிட்டார்கள் என்று கேட்கும்பொழுது இக்கலியுகத்தில், சிவத்தொண்டிற்கும் சைவத்தொண்டிற்கும் மேலான பலன் வேறு இல்லே என்று கண்கூடாகத் தெரிகின்றது. குருமணியவர்களின் ஆன்மா சாந்தியுறுவதாக.

தற்பொழுது 26-வது குருமகாசந்நிதானமாக விளங்கும் பெரியார் அவர்களும் எங்களே உய்விக்க வேண்டுமாறு இறை வியின் பாதமலர்களேப் பணிவோம்!

---

## ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள் வாக்கு

உன்ளுதே பற்ரு துரையாதே யொன்றி அதில்
நின்ளுமம் இல்லே நிகழாதே - பன்ளுட்
பரையிறந்து நிற்கும் பயனணேந்தார்
திரையிறந்து நிற்கும் சிவம். (நெஞ்சி

# சைவம் வளர்த்த சற்குருமணி!

(வித்துவான், பொன். அ. கனகசபை)

செந்தமிழ்ப் பயிரைக் காக்கும் தெய்விகப் புட்கலா வர்த்தம்
நந்துயர்ப் பவத்தை மாற்றும் நல்லருண் நெறிச்சஞ் சீவி
இந்திர நிதியங் கொண்டு இரவினை யகற்றும் பானு
சுந்தரக் கயிலைக் குருமணி சுடர்சிவ மாயிற் றன்றே.

புண்ணியக் கயிலை நின்றும் போந்திடு மணுக்கத் தொண்டர்
மண்ணினன் னெறியைக் காட்டி மகோதையிலழைப்புப்பெற்
விண்ணுயர் கயிலை சென்று மீள்குரு சந்நி தானம் [றார்
கண்டிட விதேக முத்தி சூாசியம் பதியிற் பெற்றார்.

குடமுழுக் காட்டி யுள்ளங் கொள்ளுபூ சனையி னோடு
திடமுறு சிறப்பு மாற்றித் தெய்விகங் கமழச் செய்து
அடியவர் பரவிப் போற்ற அருளர சியற்றி ஏற்றுக்
கொடியுடைச் சிவன்றாள் கயிலைக் குருமணிசேர்ந்தாரன்றே.

தோத்திர முறைகட் கெல்லாந் தொன்மர புரைகள் யாரும்
ஏத்திட இயற்று வித்தும் எழிலுறு பதிப்பாய்த் தந்தும்
மாத்துயர் களைய நல்ல மருத்துவம் உணவு ஞானக்
கோத்திரம்நிறுத்திக் கயிலைக் குருமணி சிவன்றாள்சேர்ந்தார்.

சிவரா சதானி யாகத் திகழ்தரு மையா தீன
நவரா சசுப்பிர மணியர் நலமுற வளர்த்த சைவம்
நவரா சருள மேறிச் சகமீ தெழுந்து மாந்தர்
விரா சருயி ரொன்றிப் புதுவாழ் வளிக்கு மன்றே.

# தாயிற் சிறந்த தலைவன்!

(வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன்)

அப்பன்நீ அம்மைநீ ஐயனும்நீ
அன்புடைய மாமனும் மாமியும்நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும்நீ
ஒருகுலமும் சுற்றமும் ஓருரும்நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய்நீ
துணை யாயென் நெஞ்சம் துறப்பிப்பாய்நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத்தும்நீ
இறைவன்நீ ஏறூர்ந்த செல்வன் நீயே'

என்ற வாகீசப் பெருந்தகையின் பாடல் இலக்கணமென்றால் அதற்கு நல்லதோர் இலக்கியமாகத் திகழ்ந்தவர்கள் தருமை ஆதீன 25வது குருமகாசந்நிதானமாக அருட் செங்கோல் ஒச்சிய ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள் ஆவர்.

'அன்புமிக உண்டாய் அதிலே விவேகமுண்டாய்த்
துன்ப வினையைத் துடைப்ப துண்டாய் - இன்பம்
தரும்பூ ரணத்துக்கே தாகமுண்டாய் ஓடி
வருங்கா ரணர்க்குண்மை வை'

என்ற சிவபோகசார அறமொழிக்கிணங்க உலகியல் அளற்று நிலத்திலே அடி அழுந்தப்பெற்று, அவதியுறும் மக்களுக்கு ஓர் பற்றுக்கோலாக, ஆன்மீக வேட்கையுள்ளவர்களின் அவாதணிக்கும் ஞான இன்ப ஊற்றாக, ஞானச் செல்வத்தையும், ஊனச் செல்வத்தையும் ஒருங்கே அளிக்கும் ஆன்மீகச் சர்க்கரையாக ஒப்பாரும் மிக்காரும் இன்றி ஓடிவருங் காரணர்க்கு உண்மைப் பொருளாய் தவக்குன்றாய்த் திகழ்வது தருமை ஆதீனம்.

16ம் நூற்றாண்டில் மதுரை பொற்றாமரைத் தடாக தின் ஈசான மூலையில் இருந்து கண்ணுக்கினிய பொருள

அங்கயற் கண்ணி பங்குறை ஆலவாய் அண்ணல் குருஞான சம்பந்தரின் கரத்து வந்தடைந்தார். கமலை ஞானப்பிரகாசரால் ஞானதீக்ஷை அருளப்பெற்ற குருஞானசம்பந்த சுவாமிகள், புலியும், பசுவும் ஒரே துறையில் நீர் குடித்து வேற்றுமையில் ஒற்றுமை கண்ட தருமபுரத் தலத்தையே, ஞானப் பயிர் வளர்க்க ஏற்ற இடமாகத் தேர்ந்தெடுத்தார். திருக்கயிலாய பரம்பரை வேரூன்றிச் செழித்தது. அதன்வழி வந்தவர்களே ஒப்பாரும் மிக்காரும் இன்றி தன்னேரில்லாத் தலைவனாய் திகழ்ந்த 25வது குருமகாசந்நிதானம் அவர்கள்.

## எய்தற்கரியது இயைந்தக்கால்:

விண்ணிலே மறைந்து அருள்புரியும் வேதநாயகனை கண் மூன்றும் உடையதோர் கரும்பை, செம்பவளக்குன்றை வெள்ளி வெற்பின்மேல் மரகதக்கொடியுடன் காணவிரைந்தார் வாகீசர். ஆனால், அவர் கொண்ட கருத்தை ஐயாற்றிலே முற்றுவித்தார் பெருமான். அந்தநன்னாள் ஆடி அமாவாசைப் பெருநாள். அதே ஆடி அமாவாசையில் (4-8-1959) ஸ்ரீலஸ்ரீ சுப்ரமண்ய தேசிகஞான சம்பந்தப் பரமாச்சார்ய சுவாமிகள் அவர்கள் மெய்யடியார்கள் புடைசூழ அரிதின் முயன்று காண்டற்கரிய கண்ணுதற் பரம் பொருளாம் கயிலாய நாதனைக் கண்டு, மட்டற்ற மகிழ்வுமீதூர தனது பரம்பரைப் பெருமையை மெய்ப்பித்தார்கள். எய்தற்கரியது இயைந்தது. அதுவே செய்தற்கரிய செயலாக மலர்ந்தது. அன்று முதல் 'கயிலை குரு மகா சந்நிதானம்' என்று எல்லோராலும் அன்புடன்அழைக்கப் பட்டார்கள்.

## அப்பரும் குருமணியும்:

அப்பர் பெருமானுக்கும், கயிலைகுருமாமணி அவர்களுக்ும் இயைந்த பொருத்தங்கள் பல உண்டு. திருநாவுக்கர[illegible] பெருமானுக்குரிய சதய நன்னாளிலே 20-5-1945ம் [illegible]ண்டு ஞானபீடமேறினார்கள் குருமணி அவர்கள். ஆடி

அமாவாசையன்று ஐயாற்றிலே கயிலாய நாதனைக் கண்டார் அப்பர் பெருமான். அக்கயிலை நாதனை அதே தினத்தில் பனிபடர் இமயப் பெருவரையிலே கண்டார்கள் குருமூர்த்தியவர்கள். தொண்டு செய்து உயர்வுற்றார் தாண்டக வேந்தர். தருமை நாதரும் அவ்வடிச் சுவட்டிலேயே வாழ்ந்து வந்தார்.

## யாத்திரை இன்பம்:

கயிலைகுருமணி அவர்கள் யாத்திரை சென்று, சென்று அதில் கிடைக்கும் இன்பத்தை ஆரத்துய்க்கும் இயல்பு படைத்தவர்கள். இமயத் தாயின் மடியிலே திகழும் கயிலை அமரநாதம், பத்ரிநாதம், பசுபதிநாதம், கேதாரநாதம், முதலிய இமயப் பெருங் கோயில்களுக்குச் சென்று வழிபட்டும், கங்கை, யமுனை, கோதாவரி, சரயு, அமரகங்கை, அலக நந்தா, மந்தாகினி, மானச சரோவரம், ராக்ஷஸ் தால், தீர்த்தபுரி, சதத்ரு, புஷ்கரம் நர்மதை, காவிரி, வைகை, பொருனை முதலிய தீர்த்தங்களில் நீராடியும், திரிசூலி பஞ்சசூலி, நந்தா தேவி, நந்திகும்பா போன்ற தெய்வப்பனி வரைச் சிகரங்களைக் கண்டு பரவசமுற்றும் அருளனுபவத்திலே தோயும் தன்மைமிக்கவர்கள். காசி விஸ்வேஸ்வரரைப் பன்முறை சென்று தரிசித்து, பாலனுக்காகப் பாற்கடல் ஈந்த பரம கருணாநிதிக்கு குடம் குடமாகப் பாலாபிஷேகம் செய்து, பாற்கடலில் இருத்திப் பரவசமுறும் பாங்குமிக்கவர்கள். தான் மட்டுமல்லாது பக்குவம் பெற்ற பலரையும் காசி யாத்திரையில் ஈடுபடச் செய்தார்கள். பன்னிரு ஜோதிர் லிங்கத் தலங்களுக்கும் ஈழத்திலுள்ள பாடல்பெற்ற தலங்கள் இரண்டு நீங்கலாக மற்றைய திருமுறைப் பாடல் கொள்ளும் தலங்கள் அனைத்திற்கும் சென்று தரிசித்து மகிழ்ந்தவர்கள். கந்தசஷ்டி நாட்களில் விழிக்கும், மொழிக்கும், வழிக்கும் துணையான செந்தூர் வேலவனின் சேவடிகளில் பாடுகிடந்தும், தென்கோடிக் குமரித்தாயின் பேர[illegible] கில் தன்வயம் இழந்தும் தென் கோடியிலிருந்து வடகோ[illegible]

வரை யாத்திரை சென்று சென்று இன்பத்தை இதயத்தில் தேக்கி அனுபவித்தவர்கள்.

## தொட்டனைத் தூறும் மணற்கேணி:

'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற முதுமொழிக்கேற்ப யாத்திரைக் காலங்களில் தான் உற்ற இன்பங்களைத் தொகுத்து நூல்களாக்கி மற்றையோரும் அதனை நுகருமாறு உதவினர். குருஞான சம்பந்தப்பெருமானும் கொற்றவைத்தாயும், யாத்திரைக் காலங்களில் தோன்றாத்துணையாய் இருந்து குருமணியவர்களை வழிநடத்திச் சென்ற வித்தகத்தை உன்னுந்தோறும் உள்ளம் சிலிர்க்கும். திருமுறைகளுக்கு உரை எழுத அஞ்சிய நிலையை மாற்றி சாதாரண மக்களும் திருமுறைத் தோய்வு பெற வேண்டுமென்று கருதி பெரும் பொருட் செலவில் தக்காரைக் கொண்டு உரைசெய்து தாரணிபோற்ற ஒன்பது திருமுறைகளை உலாவரச் செய்தார்கள். இதுபோன்று ஆங்கிலத்திலும் தமிழிலும் வெளிவந்த அறிவியல் நூல்கள், ஆன்மீக நூல்கள், இலக்கிய நூல்கள், இலக்கண நூல்கள் எண்ணிறந்தன. திருக்குறளுக்கு உரை செய்த உரை காரர்களின் உரைகளை ஒன்று தொகுத்து 'திருக்குறள் உரை வளம்' கண்ட வள்ளன்மையை எப்படிப் புகழ்வது?

## அருள் வேட்கை:

விண்மீன்கள் இருபத்தேழு. தருமையாதீனத் திருக்கோயில்களும் இருபத்தேழு. இவ்வாலயங்கள் அனைத்திற்கும் கும்பாபிஷேகம் செய்து சீரிய முறையில் பராமரித்து வந்தார்கள். ஆதீன ஆலயங்களில் அடிக்கடி இலட்சார்ச்சனைகள் கோடியர்ச்சனைகள், புஷ்பாஞ்சலி முதலியன நிகழ்த்தினார்கள். வேளூர் செல்வமுத்துக்குமாரனுக்குநவரத்தின அங்கியும், வள்ளி தெய்வயானைக்கு மரகத இரத்தின அங்கிகளும் அணிவித்து ஆனந்தம் அடைவார்கள்.

'உன்னைச் சிங்காரித்து உனதழகு பாராமல்
என்னைச் சிங்காரித்து இடர்ப்பட்டேனே,

என்பது சிவபோக சாரம். இறைவன் திருமேனியைப் பூவாலும், பொன்னாலும், மணியாலும் அலங்கரித்து அழகு பார்ப்பதில் தணியாத வேட்கை உள்ளவர்கள்.

தலைநகராம் தருமையில் பதினெண்கரங்களுடன் கூடிய அன்னை மகாலக்ஷ்மி துர்க்காதேவியின் திருவுருவை அமைத்து அற்புத ஆலயம் எடுத்து கணக்கற்ற அணிமணிகள் சாத்தி கோடிக்கணக்கில் அர்ச்சனைகள் செய்வித்து ஆனந்த சாகரத்தில் தானும் திளையமாடி அன்பர்களையும் அனுபவிக்கச் செய்த செம்மல். அருளுக்கு அபிராமியையும் செல்வத்திற்கு செல்வமுத்துக்குமரனையும், வீரத்திற்கு கொற்றவைத் தாயையும் வைப்புக்கடவுளராகக் கொண்டு வழிபடுபவர்கள்.

## விருந்தோம்பல்:

''அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி''

தமிழகத்திற்கே உரிய தனிக்கலைவிருந்தோம்பல். அதனை ஓர் அருங்கலையாகவே கையாண்டு வந்தார்கள் கயிலை குரு மகா சந்நிதானம் அவர்கள். விருந்து புறந்தருவதில் தன்னிகரற்று விளங்கினார்கள். வருபவர்களின் வயிறு நிறைய உணவு நல்கியும், கரம் நிறைய நூல்களை அளித்தும், அகப்பசியையும், அறிவுப்பசியையும் ஒருங்கே தணிக்கும் ஒப்புரவாளர். ''வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்'' என்பார் இராமலிங்க வள்ளல். அதுபோன்று மக்களின் முகம் வாடினால் குருமணியின் அகம் வாடும். ஏழைகளின் கண்ணில் நீர் துளித்தால் குருநாதரின் கண்களில் குருதி துளிக்கும். தாயினும் சாலப் பரிந்து ஊட்டி வளர்ப்பார்கள்.

குருமாமணியின் செயற்கரிய செய்கைகளில் எதைஎழுது வது? எதை விடுவது? கடல் நீரை, ஒரு சிறிய செப்பின் துணை கொண்டு முகந்து ஊற்றி வற்றச் செய்ய முடியுமா? குருமணியின் வாழ்க்கை தொட்ட இடமெல்லாம் இனிக்கும்.

## இறை வாழ்வு:-

ஸ்ரீ லஸ்ரீ கயிலை குரு மகா சந்நிதானம் அவர்களின் ஜன்ம நக்ஷத்திரம் ஐப்பசி திங்கள் அஸ்த நக்ஷத்திரம் கூடி வரும். இம் முறை இரண்டு தடவை வருவதால் முதல் அஸ்த நக்ஷத்திரத்தைத் திருச்செந்தூர் வேலவனின் திரு வடிகளில் கொண்டாடினார்கள். குருமணியவர்களின் ஜன்ம நக்ஷத்திரத்தை முன்னிட்டு, காலி ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேஸ்வர ருக்கு நாங்கள் அர்ச்சனை செய்து பிரசாதத்தை திரு முன் அனுப்பினோம். அது போன்றே நயினை உறை நாயகிக்கும், நல்லூர் முருகனுக்கும் அர்ச்சனை செய்து பிரசாதத்தை சிவஸ்ரீ ஐ. கைலாச நாதக் குருக்கள் அவர்களும் அனுப்பி னார்கள். குருநாதரும் அவைகளைப் பெற்று மகிழ்ந்தார்கள்.

14-11-71 அன்று வரும் நாண்மக்கலத்தை ஸ்ரீ காசியில் கொண்டாடத் திருவுளம்பற்றி 8-11-71 அதிகாலை அடி யார்கள் புடைசூழச் சென்னையினின்று வாரணாசிக்கு எழுந் தருளினார்கள். யாத்திரை செல்லும் பொழுது வழிச் சிந் தனைகள் பெரும்பாலும் திருமுறைகளைப்பற்றியும், சாத் திரங்களைப்பற்றியுமே அமைந்திருக்கும். ஆனால் இம்முறை குறிப்பாக முக்திநிலை குறித்தே திருவுளச் சிந்தனைகள் அமைவதாயிற்று. 'ஆரூரில் பிறக்க முக்தி, தில்லையில் இருக்க முக்தி, அருணையை நினைக்க முக்தி, காசியில் இறக்க முக்தி' என்றெல்லாம் ஸ்ரீ காசியைச் சுற்றியே சிந்தனை சுழன்றது. எப்பொழுதுமில்லாத புதுமை இது.

10-11-71 அதிகாலை ஸ்ரீ காசியை வந்தடைந்து காசி குமாரசுவாமி மடத்திற்குக் குருநாதர் எழுந்தருளினார்கள். சென்ற சிறிது நேரத்தில் திருமேனி சற்றே நலிவுற்றது. உடன் சென்ற மருத்துவ இயல் வல்லுனர்களான அறப் பணிச் செல்வர்சிதம்பரம் டாக்டர் கே. அரங்கசாமிப்பிள்ளை அவர்களும் மாயூரம் டாக்டர் திரு. நாராயணன் அவர் களும் தக்கமுறையில் சிகிச்சை அளித்தனர்.

மாலையில் தருமையாதீன 10வது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவஞானதேசிக பரமாச்சார்ய சுவாமிகள் அவர்கள் இயற்றி அருளிய ஸ்ரீ காசி தாரகப்பத்தைப் பாடச் சொல்லி செவிமடுத்தார்கள். இடையிடையே பாடல்களுக்குரிய அரும் பொருள் விளக்கமும் அருளினார்கள். இரவு 7-45க்கு இருக்கையில் அமர்ந்திருந்தவாறே 'முத்தையா' என்று அழைத்தார்கள். மறுவிநாடி விஸ்வநாதரின் திருவடிக்கமலங்களிலே இரண்டறக் கலந்து தெய்வமாகிவிட்டார்கள். எத்தகைய இறைவாழ்வு! நெஞ்சு புல்லரிக்கின்றது. கண்கள் குளமாகின்றன. நம்மையறியாமலேயே நமது சிரம் தாழ்ந்து அஞ்சலிக்கின்றது.

11-11-71ல் குருநாதரின் தெய்வத்திருமேனி விமான மூலம் சென்னை வந்தடைந்து தருமை மீண்டது. மறுநாள் வெள்ளிக்கிழமை அன்னையாய், அப்பனாய், ஐயனுமாய் ஏன் நமக்கு எல்லாமாய் விளங்கிய புனிதனின் பொன்மேனி, அலங்கரிக்கப்பெற்று சிவிகையில் வீதி வலம் வந்து ஜீவன் முத்தராம் ஆனந்த பரவச மூர்த்திகளுக்கு அண்மையில் கோயில் கொண்டு விட்டது.

இத்தகு பீடுமிகு கயிலாய பரம்பரையிலே இன்று ஞான மூர்த்தியாக தருமைஞான பீடத்தை அலங்கரிப்பவர்கள் ஸ்ரீலஸ்ரீ ஷண்முக தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் அவர்கள். சுவாமிகள் ஈழத்துடன் நெருங்கிய உறவு பூண்டவர்கள். அரியபொருளையும், எளியநடையில் மிக இனிமையாகப் பேசும் சொல்வளம் மிக்கவர்கள். எழுத்து நடையிலே வல்லவர்கள். எல்லாவற்றிற்கும் மேலாகத் தமது குருநாதரிடத்து ஆழ்ந்த பக்திபூண்டவர்கள். சீலம்மிக்கவர்கள். செயல்திறம் செறிந்தவர்கள், ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களின் அருளாட்சி செந்தமிழ்ச் சொக்கன் திருவருளாலும். குருவருளாலும் சிறந்தோங்கிப் 'பொற்கால'மாகத் திகழ இறைவனடி வழுத்துவோம்! வணங்குவோம்!!

# இயற்கையே சோதிடம்

ச. இ. அப்புத்துரை சோதிடன் - வெள்ளவத்தை

## 17ம் பாடம் - வானசாஸ்திரம் - புதன்

சூரியனுக்கு மிகச் சமீபமாக இருக்கும் கிரகம், வலக்கன் (VALCAN) என்னுங் கிரகம். இது முற்றுகக் கண்டு பிடிக் கப்படாமையால் சூரியனுக்கடுத்த கிரகம், புதன் என்று கொள்ளப்படுகிறது. புதனும் பூமியைப் போல் சூரியனிலி ந்து பிரிந்த ஒரு கோளமாகும். இவற்றின் உற்பத்தி யாதி யந்தம் 100 கோடி வருஷங்கள் வரையிருக்கும். சூரியமண் டலத்தைச் சுற்றி புத மண்டலம் அமைந்திருக்கிறது.

மற்றுங் கிரகங்களைப் பார்க்க இக்கிரகம் சூரியனுக்கு மிகச் சமீபமாக இருக்குங் காரணத்தால் இப்புதனுலகத் தில் சூரிய வெப்பம் 665F டிக்கிரிவரையிருக்கும். இக்கிர கம் சூரியனைச் சுற்றிவரும் போது தனது ஒரே முகத்தைச் சூரியனுக்குநேராகவைத்திருக்கும். ஒருபாகம் எப்பொழுதும் பகலாகவும், மற்ற பாகம் எப்பொழுதும் இராவாகவுமிருக் கும். இது பூமியைப்போல் சாய்ந்து அயனமாகச் செல்லு மாகில் இவற்றிற்குரிய வெப்பம் 304F டிக்கிரிவரையிருக் கும். இது தனது நாராசத்திலும், 60 நாடி 12 விநாடிக் கொருமுறை சுற்றிவருவதினுல் இவற்றின் ஒரு துருவம் சூரியனுக்கு எதிர்முகமாகவும் மறுதுருவம் இருள்பாகத் திலுமிருக்கும். சூரியனுக்கும் புதனுக்குமுள்ள தூரம் 360 லட்சம் மைல்களாகும். இப்போ 1938-ல் 3,53,92,000 மைல்களே. ஆகையால் பூமியிலிருந்து புதன் கிரகத்தைப் பார்க்க சூரியனிலிருந்து 30 பாகைக்குட் தெரியும் சூரிய னுக்கு மிகச்சமீபமாக இருக்குங் காரணத்தினுல் தூரதரிசி யந்திரத்தின் உதவியின்றிச் சுத்தமாகப் பார்க்க முடியாது.

இப்புதனைச் சூரிய உதயத்திற்கு முன்னும் நாலு நாழிகை 96 நிமிஷங்களுக்குள் காலை மாலை நேரங்களில் வானம்தெளி வாக இருந்தால் பங்குனி, சித்திரை, ஆவணி புரட்டாதி மாதங்களில் பூதக்கண்ணுடியால் பார்க்க முடியும். சந்திர னைப் போல் காலத்திற்குக் காலம் வடிவங்கள் மாறி மாறித் தோன்றும் என்கிறுர்கள் விஞ்ஞானிகள்.

இப்புதனைச் சூழ்ந்து பரமா அணுப்படல மதிகம் சூழ்ந் திருப்பதாக ஆராய்ச்சியாளர் கருதுகிறுர்கள். மற்றக் கிர கங்களிலும் பார்க்க இக்கிரகம் மிகச் சிறியது. இவற்றின் விட்டளவு 3050 மைல் சுற்றளவு 9585 மைல்களாகும். மேற்பரப்பு 3,20,00,000, சதுர மைல்களை யுடையது. பூமியின் பருமனிலும் இது பதினுலு பங்கு சிறியது. புதன் கிரகம் மற்ற கிரகங்களிலும் பார்க்க மிகவேகமான சுற் ருேட்டக் கெதியுடையது. ஒரு விநாடிக்குப் 12 மைல் வே கத்தில் சென்று சூரியனைச் சுற்றிவர 88 நாள் 58 நாடி 8 விநாடியில் செல்லும். அது அக்கிரகத்திற்கு ஒரு வருஷ மாகும். புதன் கிரகத்தில் ஜீவராசிகள் வாழ இன்னும் பரி பக்குவமடையவில்லை யென்பது ஆராய்ச்சியாளர் முடிவாகும்.

இந்து மத இருடியர் கருத்துக்களையும் கவனிப்போம். புதன் பெயர் அநுரு அருணன், அநுவழி கணக்கன் சௌமன் சாமன் சிந்தை, பச்சை சௌமியன், தூதுவன் தேர்ப்பா கன், நற்கோள், நிபுணன், புந்தி, புலவன், மதிமகன் மால வன், மால், மேதை, வாயு ஆக 21. இன்னும் பல பேர் களுண்டு. சிவ சூரியனுக்கு அடுத்தாப்போல்தான் திருமா லின் அம்சம். வாயுவினம் சமுமாம். சூரியன் தீக் கோளாக வும் அருகினில் மாலாகிய புதன் வாயுக் கோளாக நின்று சூரிய வெப்பத்தைத் தணிக்கும் தன்மையது. சூரியன் ஞானி கட்கெல்லாம் ஆசிரியன். பகவான் முதன் முதலில் கர்ம யோகத்தைச் சூரியனுக்குப் போதித்தார். பிறகு அது சூரிய னிடமிருந்து மனுவுக்கு அதாவது சிந்தனைச் சக்திபெற்ற மனிதனுக்குக் கிடைத்தது. சூரியன் சுதந்திரமானவன் க டற்றவன் நெறிதவருதவன், இன்னெறி தவருமையினு

அவனது சுதந்திரத்தின் சாரம் அடங்கியுள்ளது. சூரியன் ஓர் கர்ம யோகியுமாவான். தான் செய்யும் சேவையில் பயனை விரும்பாதவன்.

மாலாகிய புதனே காக்கும் கடவுளின் அம்சம் பெற்ற வன். சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் பேதம் விளைவிப்பது புரா ணங்களேயாகும். எங்கள் ஆக்கையில் உயிர் போன்றதே சூரியன். சுவாசம் போன்றதே புதனுகும்.

எங்கள் பாடம் பதினேழாம் பாடமாகும். சூரிய குமார னுகிய கர்ணனை 17ம் நாள் போரில் கிருஷ்ணர் போய் கர்ண னிடம் அவனது தருமமனைத்தையும் தானமாக வேண்டிக் கொண்டு தமது விராட்பரம் பொருளாகிய விஸ்வரூபதரி சனத்தைக் காட்டித் தான் யார் என்பதை விளக்கியபோது கர்ணன், பச்சை மாலை கண்டவுடன் (புதனம்சமான)

'ஆக்கிய பொருள்களெல்லாம் அந்தணர் முனிவர்க் கீந்தேன்
நோக்கிய இளமையெலாம் நொந்திளை மாதர்க் கீந்தேன்
தாக்கிய சமர்க்களத்தில் தனஞ்செயனுக்குயிரை யீந்தேன்
பாக்கியம் செய்தேன் நானும் பச்சைமால் காணப்பெற்றேன்'

இராமாயணத்தில் இந்திரன் குமாரனுகிய வாலியைக் கொன்று, சூரியகுமாரனை சுக்ரீவனுக்குப் பட்டஞ் சூட்டி னுர் ஸ்ரீராமபிரான். பாரதப் போரில் சூரியகுமாரனுகிய கர் ணனைக் கொன்று இந்திரன் குயாரனுகிய அரிச்சுனனுக்குப் பட்டம் சூட்டினுர் இக்கிருஷ்ணபகவான். கீதையில் 17ம் அத்தியாயத்தில் அனுபந்தம் வேலைத்திட்டத்தை எடுத்துத் தொகுத்துக் கூறுகின்றுர் அரிச்சுனனுக்கு.

நாம் பிறக்கையில் மூன்று அமைப்புகளை உடன் கொண்டு வருகின்றேம். மனிதன் இம் மூன்று அமைப்புகளையும் நன்று நடத்தித் தன் வாழ்க்கையை, தன் உலகை இன்பமயமாக் கும் பொருட்டு கீதை இவ்வேலை முறையை வகுத்துள்ளது. அம் மூன்று அம்சங்கள் யாவை? முதல் அமைப்பு நம் மீது போர்த்தப்பட்டுள்ள இவ்வுடல், இரண்டாவது, நம்மைச்

சுற்றிலும் பரந்துள்ள விசாலமான எல்லையற்ற சிருஷ்டி, பிரும்மாண்டம்; அதன் ஒரு பகுதியாகவே நாம் இருக்கின்றோம். மூன்றுவது நாம் பிறந்துள்ள சமூகம், நம் பிறவியை எதிர்நோக்கியிருந்த பெற்றோர், சகோதர சகோதரிகள், அக்கம் பக்கத்தவர்கள் ஆகியோராவர். நாம் ஒவ்வொரு நாளும் இம் மூன்று அமைப்புகளையும் உபயோகித்து வருகின்றோம். தேய்க்கிறோம். நம்மூலமாய் இம் மூன்று அமைப்புகட்கும் அன்றாடம் ஏற்படும் தேய்மானத்தை ஈடு செய்வதற்கு நாம் இடையருது முயன்று, வாழ்க்கையைப் பயன்பெறச் செய்ய வேண்டுமெனக் கீதை விரும்புகிறது. இம் மூன்று அமைப்புகளிடமும் நமக்குப் பிறவியிலேயே ஏற்பட்டுள்ள கடமைகளை நாம் அகங்காரமின்றி நிறைவேற்ற வேண்டும்.

இக்கடமைகளை நிறைவேற்ற வேண்டியதுதான்; ஆனுல் இவற்றை நிறைவேற்றும் முறையாது? யக்ஞம், தானம், தவம், இம் மூன்றின் சேர்க்கையினுல், அம் முறை அமைகிறது. இச் சொற்களை நாம் அறிந்திருப்பினும் இவற்றின் பொருளை நன்கு புரிந்துகொண்டிருக்கவில்லை. இவைகளின் பொருளை நன்கு புரிந்து கொண்டு இவற்றை வாழ்க்கையில் சேர்த்துக் கொள்வோமாயின் இவ்வமைப்புகள் பயன்பெற நம் வாழ்க்கையும் சுதந்திரமும், சுகமும் பெற்றுத்திகழும்.

முதல் யக்ஞமென்றுல் என்ன என்று பார்ப்போம். சிருஷ்டி (பூமி) என்ற அமைப்பை நாம் ஒவ்வொருநாளும் பயன்படுத்துகின்றோம். நாம் ஆயிரம் பேர் கூடி ஓரிடத்திலிருந்து ஒரு நாள் விருந்துண்போமாஞல், சிருஷ்டியின் அப்பகுதியனைத்தும் கெட்டுப் போகிறது. அவ்விடத்திலுள்ள காற்றும் இடமும் அசுத்தமாகிறது. நாம் உணவு கொள்ளுவதன் மூலம் சிருஷ்டியை அந்த அளவுக்குத் தேய்த்து விடுகின்றோம். சிருஷ்டி அமைப்பின் இத்தேய்மானத்தை நாம் ஈடு செய்ய வேண்டும். இதனுலேயே நாம் யக்ஞ மென்ற அமைப்பு ஏற்படுகிறது. யக்ஞத்தின் நோக்க மென்ன

சிருஷ்டிக்கு ஏற்படும் நட்டத்தை ஈடு செய்தலே. ஆயிர மாண்டுகளாக நாம் நிலத்தை உழுது பயிரிட்டு வருவாயை எடுக்கின்ருேம். அதனுல் நிலத்தின் சக்தி குறைகிறது. 'யக்ஞம்' பூமிக்கு அதன் சக்தியை (பயனே) திருப்பிக் கொடு, பூமியை உழு அதற்கு உரமிடு என்று சொல்கிறது. 'சாப்பிட மட்டுந்தான் தெரியும். உழுது பயிரிடாமல் இருப்பது சோம்பேறியே யாம்' உரமிடுதல், பூமியை சுத்தம் செய்தல் இவை யக்ஞத்திற்கு ஒரு காரணமாக, மற்ருெரு காரணம் உரமிட்டு தேய்மானத்தை நிரப்புதலால் யக்ஞம் பூரணப்படுகிறது. நாம் ஆடை அணிகின்ருேம். ஒவ்வொரு நாளும் நூல் நூற்ருல்தானே ஆடைகளே அணிய முடியும், ஆகவே பயிரிடுதல், தானியம் விளேவித்தல், நூல் நூற்றல் ஆகியவையும் யக்ஞ காரியங்களேயாம். இவை சுயநலமல்ல. நம்மால் ஏற்பட்ட நஷ்டத்தை ஈடு செய்யும் கடமை உணர்ச்சியுடன் செய்துவரவேண்டும். இதனுல், கன்மம், விகர்மம் தளேத்து அகர்மமாய் விளேயும். இம் மூன்றும் தாய், தந்தை, பிள்ளே, சத்து சித்து ஆநந்தமேயாம்.

இது நாம் செய்யும் பரோபகாரமல்ல. நாம் ஏற்கனவே கடன்பட்டவர்களே; பிறக்கும் போதே தலேயில் கடன்மூட்டையைத் தாங்கிக்கொண்டு வருகிருேம். இக்கடனேத் தீர்ப்பதற்காக நாம் செய்ய வேண்டிய உற்பத்தியை யக்ஞம் அல்லது சேவையே அன்றி பரோபகாரமல்ல. இச் சேவையின் மூலம் நாம் நம் (பிராப்தம்) கடனேத் தீர்க்கவேண்டும். எடுத்ததெற்கெல்லாம் இச்சிருஷ்டியை, நம் தாயை நம் மனேவியை, நம் மகளே உதவி கோருகின்ருேம். அவைகட்கு ஊண் உடை உழைப்பு, தானம் தவத்தையும் செய்துவிடல் வேண்டும்.

இரண்டாவது அமைப்பு நமது சமூகம், தாய், தந்தை, குரு நண்பர் ஆகிய இவரனேவரும் நமக்காக உழைக்கிருர் கள். சமூகத்தின் கடனேத் தீர்க்கும் பொருட்டு தானம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. தானம் என்பதற்கு சமூ

கத்தின் கடனைத் தீர்ப்பதாகச் செய்யப்படும் காரியம் என்பது பொருள். 'பரோபகாரமல்ல' சமூகத்திலிருந்து ஏராளமான அளவிலடங்காத சேவை உதவி பெற்றிருக்கின்றோம். இவ்வுலகில் நாம் வரும்போது பலவீனமாக வந்தோம். இச்சமூகம் எம்மைப் பெரியவனாக்கிவிட்ட கடமையை மறக்ககூடாது. மூன்றாவது அமைப்பு இவ்வுடல். இவ்வுடலும் ஒவ்வொருநாளும் தேய்ந்து கொண்டே போகிறது. நாம் நம் மனம், அறிவு, புலன்களனைத்தையும் பயன்படுத்துகின்றோம். காமக் குரோத குற்றங்களைப் போக்க துடைப்பதற்குத் தவம் அவசியமாகும்.

---

## சமயப் பேரவையில் கயிலைக் குருமணி!

தென்னாட்டில் இந்து சமயங்களின் ஒற்றுமையை உருவாக்கத் தோன்றியுள்ளது தமிழ்நாடு தெய்வீகப் பேரவை. சமயப் பணி, சமூகநலப்பணி இவைகளால் மக்களின் மனதை நல்வழியில் திருப்பித் தொண்டு செய்ய முற்படும் இப்பேரவைக்குப் பொதுமக்கள் அனைவரும் ஆதரவு தருதல் வேண்டும். இப்பேரவையின் மூலமாகத் தமிழ்நாட்டிலுள்ள பல சமயத் தலைவர்களை ஒருசேரச் சந்திக்கும் ஒருபேறு மக்களுக்குக் கிடைத்து வருகிறது.

தமிழ் மக்கள் தெய்வ பக்தியில் அன்றும் இன்றும் சிறந்தவர்கள். என்றும் இந்த இறையுணர்வு மக்களிடையே நிலைபெறுதல் வேண்டும். எல்லா நலங்களையும் நமக்குத் தந்துதவும் இறைவனை நாடோறும் சிந்தித்து வழிபடவேண்டும்.

''வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனை
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்தவா வினையேன் நெடுங்காலமே!''

---

# "உரையொழியப் பற்றுர் பெற்றுர்!"

(செ. விசாகப்பெருமான்)

★★

"உற்ருரும் பெற்ருரும் மோவாதுரை யொழியப்
பற்ருரும் அற்ருர் பவம்"

—திருவருட்பயன்.

பேரின்பமாகிய முத்தியை அடைந்தோரும், அம்முத்தியை அடைதற்குக் காரணமாகிய சமாதியை அடைந்தோரும் இடைவிடாத சமாதி நிலையை அடையாமல், கேட்டல், சிந்தித்தல் தெளிதல் என்னும் ஞான நிலைகளை எய்தியோரும், பிறவித் துன்பத்தை அற்றவராவர் என்பது இதன் பொருள். "சிந்தனை அவன் தனக்கு" ஆக்கிச் "சொல்லாலும் செயலாலும் எண்ணத்தாலும் சுத்தமுள்ள பக்தி நெறி சொல்லித் தந்து" "கல்லாத எளியவரும் கனிந்துருகக் கடவுட் பணி செய்து பல்லாற்ருனும் பதைப்பற ஆராய்ந்து" பற்றற்ருன் பற்றினைப் பற்றி நல்வாக்கும் சொல்வாக்கும் உடையராய் வாழ்வோர் நிச்சயமாக முத்தியை அடைவதற்கான சமாதி நிலையை அடைவர்.

இதற்குச் சான்ருக வாழ்ந்து காட்டி "வானுறையும் தெய்வத்துள் வைக்கப் பட்ட" சான்ருேர் பலர். அந்தத் திருக் கூட்டத்தின் மரபில் திருக்கைலாய பரம்பரைத் திருத் தருமையாதீனம் 25-ஆவது குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் சமாதி நிலையடைந்து பெரும் பேறெய்தியிருப்பது பெறுமவற்றுள் பெரிய பேரும். அன்பர் பணி செய்து, மக்கள் சேவையே மகேஸ்வரன் பூஜை என்று மனமுவந்து மற்றவர்களுடைய துயர் துடைத்து, "உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்" மக்களுடைய மனதைக்கொள்ளை காண்டவர் குரு மகா சந்நிதானம் அவர்கள். அப் பெரு னுக்கு" இன்ப நிலை தானே வந்து எய்தியிருக்கின்றது.

''வானே நிலனே பிறவே அறிவரியான் தானே வந்து ஆண்டு கொண்டான்'' திருமாலொடு நான்முகனும் தேடொணுத் தேவனைத் தேடிக் கண்டு கொண்டார்.

''ஒண் பொருட்கணுற்றூர்க் குறுபயனே யல்லாது
கண்படுப்போர் கைப் பொருள் போற்காண்''

—திருவருட்பயன்.

உண்மைப் பொருளாகிய ஞானத்தை அடைந்தவர்களுக்கு உறுதியாக உள்ள பேரின்பப் பொருள் ஒன்றே உறுதுணை. மற்றைய சரியை கிரியை யோகங்கள் யாவும் உறங்குவோர் கையில் உள்ள பொருள்கள், அவர்களை அறியாமலே நழுவுவது போலத் தாமாகவே அவர்களை விட்டு நீங்கி விடும் என்பது இதன் பொருள். அதே போன்று:

''இதயக் குகை நடுவின் மனது லயமடைந்து இருந்தபடி இருந்து மகிழ்ந்து, உதய நிலையொடுங்கி உலகமிறை உயிரும் ஒரு பொருள் என்றறிந்து தன் அறிவாகி அதன் உயர்ந்த துரிய முடியில் நிராசை யெனும் அமிர்த சஞ்சீவி ரசம் பருகி; பதியிற் பதிந்திருந்து மௌனப் பெருவெளியில் பரமசுகமடையும் அருள்'' பெற்றூர் சுவாமிகள்.

அதுவும் காசித்தலத்திலே சமாதி அடைந்த தன்மை இன்னும் மகத்துவமானது. 'ஒருவன் செய்யும் பாவம் அனைத்தும் காசியிலே நீங்கி மாசறுவான்' என்பது இந்துக்களின் நம்பிக்கை. தேசு வீசும் பெரியோரும் காலங்கடந்த ஞானிகளும் இருக்கின்றூர்கள். கங்கையின் மடி மீது நீர்க் குகைகளில் ஞானிகள் நம் சாஸ்திரங்களைக் காவல் காத்துக் கொண்டிருப்பதாகவும் சொல்லப்படுகிறது. காசி ஒரு புனித ஸ்தலம். இங்கே தான் ஆதிசங்கரர் வந்தார். இங்கே தான் புத்தபகவான்தர்ம சக்கரத்தைச் சுழற்றினூர்; ராமானந்தர் ஒரு முஸ்லிம் சேணிபனூன கபீரைத் தம் சீடனுக ஏற்றுக் கொண்டதும் இங்கே தான்.

"காசி க்ஷேத்திரம் சரீரம்
திரிபுவன ஞானி வியாபினி''

ஞானகங்கா..-சங்கரரின் பிரசித்திபெற்ற 'காசிபஞ்சக' த்திலிருந்து இந்த வரிகள் எடுக்கப் பட்டன. உடல் புனித வாரணுசி, மூவுலகத்துக்கும் முந்திய அருள் அன்னையும் முக்காலமும் உணர்ந்தவளுமான கங்கையே ஞானம். எம் அருட் காதலும் ஆவலும் கயை. ஆசானின் அடியில் பக்தியும், தியானமும் பிரயாகை. அவனிக் கெல்லாம் அருளாளனுன அந்தமிலா விசுவேசுவரனே உள்ளெல்லாம் உறையும் ஆத்மன். இவையெல்லாம் பொருந்தப் பெற்றத் தலமாகிக் காசி அமைந்திருக்கின்றது. ஆகவே ''அன்பினுல் அடியவராகிய கயிலைக் குருமணி அவர்கள்'' ஆவியோடாக்கை ஆனந்தமாய்க் கசிந்துருகி, இன்னருள் பெற்று இறைவர் முத்திப் பெருவாழ்வு பெறுதற்கு ஏற்ற இடமாகக் ''காசித் தலம் அமைந்ததில் வியப்பொன்றில்லை.''

''ஆதீனங்கள்'' அருட் செங்கோல் ஓச்சிவரும் ஞான பீடங்கள். இவைகளில் இருந்து எழுந்து பிரகாசிக்கும் அருள் ஒளி ஒவ்வோர் காலத்தில் பேரொளியாக மிளிர்ந்து பேறுடைய பெருவாழ்வை மற்ருேர்க்குத் தரும். அந்தப் பேரொளியிலே மக்களெல்லாம் அன்புருகி நைந்துருகுவார்கள். ஆண்டவன் அருளை மாந்தித்திளைப்பார்கள். அந்த வகையில் திருத்தருமையாதீனத்தில் ஞான பீடத்தில் எழுந்தருளியிருந்து அருட் செங்கோலோச்சி வந்த கயிலைக் குருமணிஅவர்கள் ஒரு அருளாளர். அருள்என்னும் பெருவளத்தை வற்ருத ஜீவநதி போல் வளமாக்கி கொண்டவர் 'திருக்கைலாய பரம்பரை' என்பதற்கேற்பக் கயிலாயயாத்திரை செய்து கயிலையை நேரே தரிசித்த பேரருளாளர். இவர்களுடைய அருளாட்சியில் ஆதீனத் திருக்கோயில்களில் செய்யப்பெற்ற திருப்பணிகளும் அருட்பணிகளும், தமிழ்ப் பணிகளும் யாவரும் அறிந்ததே. விதியின்மையால், அரு ளார் அமுதத்தை வாரிக் கொண்டு விழுங்கி விக்கி நின்ற ர்களுக்கெல்லாம் வழி காட்டியாய் இருந்து பெருவாழ் ரித்தவர்.

''ஞானசம்பந்தம்'' என்ற அருமையான தமிழ் மணமும், சைவ மணமும் 'கமழும்' இதழை வெளியிட்டு தமிழறிந்த நல்லுலகெல்லாம் சைவ மணம் வீசச் செய்தவர் குருமணி அவர்கள். இவ்வாறெல்லாம் ஒல்லும் வகையால் தமிழ்த் தொண்டும் சைவத் தொண்டும் புரிந்து ''சிவமெனும் விளைவுண்டாக'' வளர்ந்த ''தெய்வச் சாலி'' யான குருமணி அவர்கள் புகழுடம்பெய்திப் பொற்பதம் பெற்ற அருளுடமை ''ஆர் பெறுவார் இவ்வுலகில்''

---

## மலேசியா, சிங்கப்பூர், சுற்றுப் பிரயாணச் சொற்பொழிவுகள்.

நூலாசிரியர்: **செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி.**
கிடைக்குமிடம்: **இந்து இளைஞர் சங்கம், தெல்லிப்பழை.**
விலை: **6-00 ரூபா.**

காஞ்சி ஸ்ரீ மெய்கண்டார் ஆதீனம் குரு மகா சந்நிதானம் சீலத் திருஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகளால் 'சித்தாந்த ஞானகரம்' என்று பாராட்டப் பெற்ற அம்மையார் அவர்கள் கடந்த 19-ஆண்டுகளாகச் செய்து வந்த சமயத் தமிழ்ப் பிரசங்கங்களின் சாரமே இந்நூல்.

''நாஸ்திகம் தலை நிமிர்ந்து நிற்கும் இக்காலத்தில் தெய்வபக்தியாகிய வித்துக்களை வித்தி, அவைமுளைகொண்டு விளைவு தரும் வகையில், பிரசங்க மழை பொழிந்து, சென்ற இடமெல்லாம் சிறப்பு பெற்று பிறந்த நாட்டுக்குப் புகழ் பூத்து, இனிது பயன் செய்ய, எல்லாம் வல்ல இறைவன் திருவருள் கல்விச் செல்வியாராகிய இன்னிசைச் சொல்லின் செல்வியாருக்கு என்றும் கைக்கூடுவதாக'' என்று பண்டிதமணி அவர்களால் பாராட்டப் பெற்ற நூலாகும் வீடுதோறும் இருக்க வேண்டிய நூல்.

# கயிலைக் குருமணியும் தருமை ஆதீனமணியும்

(ஓதுவார் மூர்த்தி P. A .S. இராசசேகரன் காஞ்சிபுரம் மெய் கண்டார் ஆதீனப் பண்ணிசைப் புலவர், தேவார ஆசிரியர் நாவலர் ஆச்சிரம மண்டபம் (வண்ணார்பண்ணை) நாவலர் மணிமண்டபம் (நல்லூர்) அகில இலங்கை இந்துமாமன்றம்)

**'தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்**
**தோன்றலிற் தோன்றுமை நன்று'**

என்ற பொய்யா மொழிக் கிணங்கத் தோன்றின குரு மகான்களுக்குள் சிறந்தவராகத் தோன்றிய எங்கள் குரு நாதர் திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்தில் இரு பத்தைந்தாவது பட்டத்தில் எழுந்தருளியிருந்து சைவநன் மக்கட்கு அருளுபதேசம் வழங்கிய கயிலைக் குருமணியாம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் அவர்கள் ஆவார்கள்.

மகாசந்நிதானம் அவர்கள் தருமை ஆதீனத்தின் கண் ணிருந்து ஆட்சி செய்த காலத்தில் தேவார பாடசாலை தே வாலய மடாலய பரிபாலனம் சிவாகம பாடசாலை செந் தமிழ்க் கல்லூரி இவைகளைச் சிறப்புற நடாத்தியும் சைவ நன்மக்களுக்கு ஒரு வழிகாட்டியாக ஞானசம்பந்த மெனும் மாதாந்த சஞ்சிகையை வெளியிட்டும் இன்னும் பற்பல அறங்கள் புரிந்தும் புள்ளிருக்கும் வேளூரின் அநாதை விடுதி கட்டியும் சென்னையில் சைவப்பிரச்சார நிலையம் நிறுவியும் ஒவ்வொரு திருக் கோயில்களிலும் திருமுறை வகுப்பும் ஒலி பெருக்கி அமைத்து அதன் மூலம் திருமுறையைப் பரவச் செய்தும் பல ஆலயங்களில் மின்விளக்கேற்றியும் மாயூரத் தில் மகப்பேறு விடுதி யொன்று கட்டியும் இன்னும் தான் றந்த நட்சத்திரமாகிய அத்த நட்சத்திரத்தில் பல ஆல களில் அர்ச்சனைகள் அபிடேகங்கள் செய்தும் ஸ்ரீ மகா

லட்சுமி அஷ்டாதசபுஜ துர்க்கா பரமேஸ்வரியை தருமை ஆதீனத்தில் பிரதிட்டை செய்து ஏகதின இலட்சார்ச்சனை களால் இலட்சக்கணக்கான மக்களை ஆற்றுப்படுத்தி வழி படச் செய்தும் திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தை ஏராளமான பொருட் செலவில் கண்கவரும் ஒளியமைப் போடு அமைத்தும் இதுபோன்ற இன்னும் பல்லாயிரக் கணக்கான ரூபாய் செலவு செய்தும் பல அறங்கள் புரிந்தும் அவர்களுடைய அருளாட்சியில் பலபல தமிழ்ப் புலவர்கள் வடமொழிப் புலவர்களையும் ஆதரித்தும் வந்தார்கள். அவர் களுடைய பரிபூரண நிலையை அறியும் பொழுது சைவநன் மக்களுடைய மனவெல்லாம் துக்கப்படுகிறது.

திருவாரூரில் பிறக்க முத்தி, காசியில் இறக்க முத்தி யென்று பெரியோர்கள் கூறும் வழி மொழிப்படி காசியில் அவர்கள் பரிபூரண நிலைமையை அடைந்தது அவர்கள் செய்த சிவ புண்ணியத்தின் பயனே, விஸ்வேஸ்வரப் பெரு மானுக வந்து தடுத்தாட்கொண்டது போலும்.

அடியேன் தருமையாதீனத்தில் படித்த காலத்தில் அடியேனிடம் மிக்க அன்பு கொண்டு பல நல்ல அறிவுரை களை எடுத்தியம்புவார்கள். அவையெல்லாம் அடியேன் நினைக்குந்தோறும் கண்ணீர் பெருகுகின்றது.

அவர்கள் பெரிய சமய சம்பந்தமான விழாக்களில் தலை மை வகித்து ஆசியுரை நல்கும் போது சைவ சித்தாந்தமே ஒருருவெடுத்தாற்போன்று அமர்ந்து அறவுரைகளை வழங்கி சித்தாந்தக் கருத்துக்களை யெல்லாம் எடுத்துக் கூறுவார் கள். இவையெல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போன்று மனிதர்கள் இலகுவில் பிரயாணஞ் செய்ய முடியாத கைலை யங்கிரி யாத்திரையும் செய்து முடித்து அதனுல் கயிலைக் குருமணியானுர்கள்.

அவரின் வழியே இப்போது ஆதீனத்தில் இருபத்தாரு வது மகாசந்நிதானமாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீலஸ்ரீ

சண்முக தேசிக ஞான சம்பந்தப் பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள் மேலாய சாத்திர நூல்களும் தோத்திர நூல்களும் கற்றுத் துறைபோயவர்கள் ஈழ நன்னாட்டிற்கு வந்து சைவான்மாக்கட்கு அருளுரை வழங்கி ஈழத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள்.

இவ்வளவு சிறப்புப் பொருந்திய மகா சந்நிதானம் அவர்கள் சைவநன் மக்கட்குப் பல அருளுரை வழங்கியும் சைவ் உலகத்தின் கண்ணுகத் திகழ வேண்டு மென்று ஆதீன முதற் குரவராம் ஸ்ரீலஸ்ரீ குருஞான சம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகளை வணங்கியும் எல்லாம் வல்ல கூடல் அழக்ப் பெருமானுகிய சொக்கலிங்கப் பெருமானை வணங்கியும் வழுத்துவோமாக.

**'மேன்மை கொள் சைவநீதி**
**விளங்குக உலகமெல்லாம்'**

---

# மார்கழி மங்கையர்

நூலாசிரியர்: **திரு, வை. நாகராஜன் அவர்கள்**

கிடைக்குமிடம்: 525/29, புதியநகரம், அநுராதபுரம்.
விலை குறிப்பிடப்படவில்லை.

இளமை தொடக்கம் எழுத்துத்துறையில் ஆர்வமுள்ள நாகராஜன் அவர்கள் மார்கழி மங்கையர் என்ற பெயரைத் தமது கன்னிப்படைப்பாக வெளியிட்டிருக்கிருர். தோற்றுவாய் என்ற தலையங்கத்தில் சைவ சித்தாந்தச் சுருக்கத்தையே இலகு நடையில் தருகிருர். திருவெம்பாவை இருபது பாடல்களுக்கும் புதிய முறையில் பொருள் விளக்கம் செய்கிருர். ஒவ்வொருவர் இல்லத்தையும் அலங்கரிக்க வேண்டிய நூலாகும்.

# உணர்வு

(ஆக்கியவர்: சிவ. கிருஷ்ணம்மாள்)

ஒன்றை உள்ளபடி அறிவது உணர்வாகும். குழலினிது; யாழினிது என்று சொல்லக் கேட்கிறோம். அதன்படி சுருதி லயத்துடன் குழலூதுகையிலும்; யாழ்மிழற்றுகையிலும் நாதமயத்தைச் செவிமடுத்து அமிழ்தின் மாந்தி ஒன்றிவிடுகிறது, உயிர். அன்றலர் தாமரையைக் கண்ணுறும் கண்களின் கருமணிகள் விரிவடைந்து அழகின் மலர்ச்சியில் வயப்படும் அறிவு உணர்வாகிறது. மெல்லிய பூங்காற்று வீசிவந்து மேனியிலேபட அதில் விளைந்த சுகம் மேதினியெல்லாம் மறந்த நிலையில் ஸ்பரிச உணர்வில் ஆழ்ந்து விடுகிறது அறிவு. சர்க்கரை இனிக்கும் என்ற கேள்வியுடன் நின்று விடாமல் உண்டு ருசிகாணும் போது அதன் சுவையை உள்ளபடி அறிகிறோம். சர்க்கரையை நாவில் போட்டாலும் நா வானது மேலண்ணத்தைச் சார்ந்தே நல்லபடி சுவையை உணர்கிறது. சில்லென்று சிறு முல்லை பூத்துக்குலுங்கிய மணத்தை மென்காற்று எடுத்துவர குமிழ் நாசி நுகர்கின்றது. அதில் ஒன்றவைக்கிறது உணர்வு. இவ்வாறு விளங்கா நின்ற ஸப்த, ரூப, ஸ்பரிச, ரச, கந்தம் என்ற ஐ உணர்வு தவிர - மெய்யுணர்வும் வேண்டும். உண்மை உணர்வே பகுத்தறிவாகும். ஒன்றை உள்ளபடி அறிவதுடன், தக்க இன்ன தகாதன இன்ன என்று ஒக்க உன்னி, தக்கஅதில் நின்றிடும் நினைவே உண்மை உணர்வாகும். அந்த உணர்வில் ஒன்றிடும் சீலமிகு பழக்கமே நெறியாகும். நீதி நெறிய வாழ்வைத் தந்ததினுலே நாலந்த வேதத்தின் பொருளோனுன நானென்று மார்தட்டும் பெருமானின் சீரடியார் கூட்டம் இணங்கிச் சேர்ந்து வரும். உலகமே உடைமையாகவும் கொண்டால் அந்த மெய்யுணர்விற்கும் முடிவில்லா இன்பத்திற்கும் ஈடேது. நாமெதற்கும் அஞ்சுவதுமில்லை; அஞ்ச வருவதுமில்லை. நெஞ்சே நலம் நினைந்து, அன்பே

துதியாய் நெறி நின்றால் நீடு வாழ்ந்து நாடு நலமுற நம்மால் சில பல சாதனைகளை ஆக்கித் தர இயலும். ஆதியொடு அந்தமாமாகிய நலங்கள் பிறர்க்குதவுவதே (பரோபகாராய இதம் சரீரம். பரோபகாராய புண்யாய பாபாய பரபீடணம்) இதன் விரிவை நூல்பல விளக்குகின்றன.

கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து உற்றறியும் ஐம்புல அறிவும் மிருகங்களுக்கும், பறவைகளுக்குங் கூட உண்டு. அவற்றினின்று மேன்மையுறும் நாமோ ஐம்புல வேடரிடம் அகப்பட்டுத் தவிக்கையில் மெய்யறிவாம் பகுத்தறிவின் வழிபாய்ந்தோடி வந்தால் பூமேன் மயல் தவிர்த்து, புன்மை போக்கி, நீயே நடவீர், நடவீர் இனியே யெனநாதன் துணை செய்ய நாமே நடப்போம் நல்வழி. கல்லான மனம் கசிந்து, நெகிழ்ந்து, உருகிடில் உரித்தான உருத்தான உபதேச அனுபூதி கிட்டிடும். அகமானது அடங்கத் தயக்கமில்லை. யானோ, மனமோ, எமையாண்ட நாதனிலையோ நாதனிலை கண்டு நாடியதில் நின்று பணிந்தால் சினமடங்கக் கற்கலாம் சித்தியெலாம் பெறலாம். மனம் அடங்கவும் கற்கலாம். வாயும் வேண்டுமே வான்புகழ் பேச. தூயதுணை ஆயதுணை, சிற்றுயிர்க்கு உற்றதுணையும் அதுவே. அறிவொன்ற அறநின்ற அறிவார் அறிவில் பிறிவொன்ற நின்ற பிரான் வெறிவென்றவர்கள் உணர்வோடு உடனாகி உறைவான். வேதப் பொருளுமிதுவே. சாதனைச் சுருக்கமுமிதுவே. அம்மா பொருளென்பது மனம் இரங்கவேண்டும், உறங்க வேண்டும், இறக்கவேண்டும். தூங்காமற் தூங்கி சுகம்பெறும் காலமும் அதுவே. ஆசாநிகழந்துகளாகிய பின் பேசாவநுபூதி பிறந்திடும். தன்னந்தனி நின்று தானறியும் தன்மையுமிதுவே. மதிதந்து, நிதிஉதவி நோயற்ற வாழ்வு நாம் வாழ நம் அன்பருளக் கோவிலிலே அழகாக நடனமிடும் சிற்சபேசனை சேவிக்கவே இப்பிறவி. தப்பேதுமிலா தனிப்பொருளை எப்போதும் சார்ந்திடில் பிறவியறநினைக்கும் ஆசைப்பாடு அறவே ஒளிர்ந்திடும்.

# ஆத்மஜோதி நிலைய வெளியீடுகள்

| | |
|---|---|
| 1 திருப்புகழ் பூஜாமலர் | .50 |
| 2 சமரச ஞானக் கோவை - க. இராமச்சந்திரா | 5.00 |
| 3 ஆத்மநாதம் - மகரிஷி சுத்தானந்தர் | 3.00 |
| 4 தீங்கனிச் சோலை - பரமஹம்சதாசன் | 2.50 |
| 5 சைவ இலக்கிய கதா மஞ்சரி - அருணாசல தேசிகர் | 2.00 |
| 6 பாட்டாளி பாட்டு - மகரிஷி சுத்தானந்தர் | 1.50 |
| 7 இளங்கோவின் கனவு - நடராஜன் | 2.25 |
| 8 ஆத்மஜோதி மலர் | 1.00 |
| 9 நவராத்திரிப் பாடல் | .50 |
| 10 கந்தரனுபூதி | .15 |
| 11 கந்த சஷ்டி கவசம் | .15 |
| 12 நித்திய கரும விதி | .25 |
| 13 செல்லச்சந்நிதி பாடல் | .15 |
| 14 கதிர்காமப் பதிகம் | .25 |
| 15 மார்கழி மாதப் பாடல் | .20 |
| 16 பித்துக்குளி முருகதாஸ் பாடல் | .50 |
| 17 திருநீற்றின் பெருமை | .10 |
| 18 தருமம் | .20 |
| 19 சிவானந்தரின் அருளுரைகள் | .60 |
| 20 இவ்வாறு அருள்கிறார் சிவானந்தர் | .75 |
| 21 பக்தி | .20 |
| 22 பௌத்தம் | .20 |
| 23 பிரமம் | .20 |
| 24 அவதாரம் | .20 |
| 25 முக்கிய உபநிஷதங்களின் சாரம் - பாகம் 1-10 | 2.50 |
| 26 சுவேதாசுவத உபநிஷத விளக்கம் | .50 |
| 27 சண்முககவசம் | .50 |
| 28 சகல கலாவல்லி மாலை | .25 |
| 29 மதுபானம் விளைவிக்கும் மகா நாசம் | 1.00 |
| 30 ஸ்ரீ சத்ய சாயி கீதம் | 1.00 |

தபாற்செலவுதனி.

வியாபாரிகட்குத் தகுந்த கமிஷன் உண்டு.

ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி. (இலங்கை)

Registered at the G. P. O. as a Newspaper M. L. 59/300.

# சந்தா நேயர்களுக்கு!

அன்புடையீர்,

இறைவன் திருவருளால் இம்மாதச்சுடருடன் ஆத்மஜோதிக்கு 24-வது ஆண்டு ஆரம்பமாகி 2-ஆம் இதழ்களும் வெளிவந்துவிட்டன.

பலவித கஷ்டங்களுக்கிடையே ஜோதி வெளியாகிறது. சந்தாதாரர்கள் தமது சந்தாவை உடன் அனுப்பி வைத்தால் ஜோதியின் வளர்ச்சிக்குப் பேருபகாரமாய் இருக்கும்.

தங்கள் நண்பர்களில் ஒருவரையாவது சந்தாதாரராகச் சேர்த்து உதவினுல் ஜோதியின் வளர்ச்சிக்குப் பெருந்தொண்டு செய்தவர்கள் ஆவீர்கள்.

## ஆத்மஜோதி நிலையம்,

### நாவலப்பிட்டி, (இலங்கை.)

அச்சிடுவிப்போர்:— ஆத்மஜோதி நிலையத்தினர்.
அச்சிடுவோர்:— ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகத்தினர்.
வெளியிட்ட திகதி:— 15-1-72.